திருப்பாதம்

ஞானசம்பந்தம்

தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு

மலர் 18] விகாரி ஆண்டு ஐப்பசித்திங்கள் 10—11—59 [இதழ் 12



திருச்செந்தூர் சண்முக விலாசத்தில்

தருமையாதீனம் கயிலை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்கள்

கந்தர்சஷ்டி வழிபாடு

உ

குருபாதம்

"ஞானசம்பந்தம்"

ஆசிரியர் :-

வித்துவான். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்

துணை ஆசிரியர் :-

வித்துவான். மூத்து. சு. மாணிக்கவாசக முதலியார்

உட்பொருள்

		பக்கம்
1.	சிவ ஞான போதம் ...	779
2.	கயிலை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் அருளுரை	790, 794, 799
3.	வரவேற்பு மலர்	800, 804, 836, 838, 843
4.	வேதாந்தவித்தகரின் பாராட்டுரை ...	808
5.	தருமபுர ஆதீனம் தமிழிற்கும் சைவத்திற்கும் ஆற்றிவரும் பணி ...	813
6.	சேக்கிழார் கண்ட கண்ணப்பர் ...	820
7.	கூட்டுறவு சாகுபடியாளர் சங்கத் தோடக்கவிழா ...	825
8.	சிலப்பில் வஞ்சிக் காண்டம் ...	826
9.	செய்திகள் ...	828
10	எதிர்காலம் ...	839

கயிலை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்திற்கு வரவேற்பு

திருநெல்வேலிச் சந்திப்பு தருமபுர மடாலயத்தில் 9—11—59 திங்கள் அன்று நெல்லை அருணகிரி இசைக் கழகத்தாரால் கயிலை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்திற்குக் கோலுவழிபாடும் வரவேற்பும் நிகழ்த்தப்பட்டன. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அன்பர்களுக்கு அருளாசி வழங்கினார்கள்.

திருக்கார்த்திகை

கார்த்திகை மாதம் 28 ஆம் தேதி திங்கட்கிழமை பௌர்ணமி திதி பூர்ணமாக இருப்பதால் சிவாலயங்களில் தீபோத்ஸவம் அன்று செய்யவேண்டும், தொன்றுதொட்டு நக்ஷத்திரத்தை ப்ரதானமாக வைத்து உத்ஸவங்கள் நடத்தப்பெறும். திருவண்ணாமலை திருக்கடவூர் முதலிய சிவக்ஷேத்திரங்களில் 27உ தீபோத்ஸவம்

— தருமையாதீனம் S. சுவாமிநாத சிவாச்சாரியார்

உ
குருபாதம
வாழ்க உலகெலாம்!
ஞானசம்பந்தம்
[தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு]
மலர் 18 } விகாரி - ஐப்பசி 10—11—59 { இதழ் 12

உ
திருச்சிற்றம்பலம்

போன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

சிவ ஞான போதம்

கட்டுரை 10

(மலர் 18, இதழ் 11, பக்கம் 700 இன் தொடர்பு)

இரண்டாவது சூத்திரம்

முதல் அதிகாரணம்

'அவையே தானேயாய்' ‡ இவ்வான்மாக்கள் பலவும் முதல்வன்தானேயாய் நிற்கும்.

‡ இதனையும் 'அவையே தானேயாய்' என்னும் (சூத்திரப்) பகுதிபோல முத்திறப்படுத்துணர்தல் வேண்டும்.

அவையே யாதல், தானேயாதல், அவையே தானே யாதல், (ஆன்மாக்களே தானேயாதல்) என்று முத்திறப் படுத்துரைத்துக்கோள்க. இம் முத்திறத்தையும் தனித்தனி யாக உணர்த்தும் ஒவ்வோரு வேண்பாவும் ஒருங்குசேரக் கூறும் ஒரு வேண்பாவும் அமைந்துள்ளன.

1. தன்னுற்கூறப்படும் போருள் :- 'இவ்வான்மாக்கள் பலவும் முதல்வன்ருனேயாய் நிற்கும.'

2. அதன்கண் ஐயப்பாடு :- ஆன்மாக்களும் முதல் வனும் அபேதமோ ? பேதமோ ? பேதாபேதமோ ?

3. அதற்குப் பிறர் கூறும் பக்ஷம் :-

(அ) மாயாவாதி முதலோர் கூற்று :- 'ஆன்மாக்களும் முதல்வனும் போன்னுலாகிய பணியும் போன்னும்போல அபேதமாம்.'

(ஆ) பரிணுமவாதிகள் கூற்று :- அவை இருளும் வேளியும் போலப் பேதமாம்.

(இ) ஏனைச்சமயத்தார்கூற்று :- போருளும் சோல்லும் போலப் பேதாபேதமாம்.

முதல்வனே முதலில்வைத்துரைத்தால், போன், ஒளி, சோல் மூன்றும் முற்கூறப்படும்.

4. அவற்றை மறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிபு :-

முதல்வன் கலப்பினுல் உடலின் உயிர்போல அவ் வுயிர்களேயாயும், போருட்டன்மையால் கண்ணிற் கதிரோன் போல அவ்வுயிர்களின் வேறுமாயும், உயிர்க்குயிராதற் றன்மையால் கண்ணோளியின் ஆன்மபோதம்போல உடனு மாய் நிற்பன். இவ்வாறு ஆன்மாக்களிடத்தில் முதல்வன் நிற்கும் நிலேயே அத்துவித நிலே என வேதாகமம் விளம்பும்.

5. இயைபு :-

(அ) 'கட்டு முறுப்பும்'

(ஆ) 'ஒன்றென்ற தோன்றேகாண்'

(இ) 'பண்ணையும் ஓசையையும் போல'

(ஈ) 'அரக்கோடு சேர்த்து' எனத்தொடங்கும் வெண்பா நான்கும் ஆம். அவற்றின் பொருள் பின் எழுதப்படும்.

முற்சூத்திரத்தின் இறுதி அதிகரணத்தில் கடவுள் அல்ல என விலக்கப்பட்டவை சேதனப்ரபஞ்சமே (ஆன்மாக் களே). அங்கே சங்கார கர்த்தா உலகிற்கு முதற் கடவுள் என்பது போந்தது. அதில் ஒரு தடை. அதாவது ஒரு தேர் செய்யப் பலர் வேண்டும்; மிகப் பெரிய அதிவிசித்திரமான உலகைப் படைக்க மற்றும் அத் தன்மையராகிய முதற் கடவுளர் பற்பலர் உளர் எனக்கொள்ளும் அநேகேசுவர வாதிகள் முதலோர் மதம் பற்றிய தடை.

தேர் முதலாயின பலராற் செய்யப்படுவனவே, படினும் அப்பலரும் ஒருவன் ஏவல்வழிநின்றே செய்வர். அவ்வாறே சங்காரகாரணன் ஏவவ் வழிநின்றே ஏனையோர் பிரபஞ்சோற் பத்தி, திதி, நாசம் புரிவர். புரிதலால், அவர் முதற் கடவுளர் அல்லர். சங்காரகருத்தாவே முதற்கடவுள். இங்கு இவ் வாற்றல் விலக்கப்பட்டது சேதனப் பிரபஞ்சமே என்று தெரிந்துகொள்க. அசேதனப் பிரபஞ்சம் (சடம்) கருத்தா அல்ல என விலக்கப்படல் வேண்டா, அதனுல், அம் முதற் சூத்திரத்து முடிவில் 'ஈறேமுதல்' என்ற ஏகாரத்தாற் பிரிக்கப்பட்ட சேதனப் பிரபஞ்சமே, இவ்விரண்டாஞ் சூத்திரத்தில் 'அவை' எனப்பட்டது. ஆதலின், 'அவை' என்றது ஆன்மாக்களைக் குறிக்கின்றது.

'அவையே தானேயாய்' என்னும் சூத்திரத்தின் தொடர்க்கும் 'ஈண்டு இவ்வான்மாக்கள் பலவும் முதல்வன் ருனேயாய் நிற்கும் என்றது' என்னும் உரைக்கும் உள்ள

போருளோருமையை உணர்ந்து கோள்க. முன்னதன்கண் அகரச்சுட்டுளது. இகரச்சுட்டுள்ளதே பின்னதில் வேறுபாடு. 'ஈண்டு' என்று கோண்டது முதலதிகரணத்தின் அண்மை நோக்கி. அதனுல் இவ்வான்மாக்கள் எனலாயிற்று,

'ஈண்டும் இரட்டுற மோழிந்துகோள்க' என்று சிற்றுரையில் மாதவச்சிவஞான யோகிகள் எழுதியருளிய வாக்கியம் அறியத்தக்கது. சூத்திரத் தோடர்க்குக்கோள்ளும் வண்ணம் போழிப்புரைத் தோடர்க்கும் போருள் உணாத்துக்கோள்க என்றவாறு.

வினு: 1. அவையேயாதல், 2. தானேயாதல், 3. அவையேதானேயாதல் என்னும் அவ்வாறு மூவகையாய் முதல்வன் நிற்பன் என்றற்குப் பிரமாணம் என்னே ?

விடை;- 'அத்துவிதம்' என்ற சோல்லானே ஏகம் என்னில், ஏகம் என்று சுட்டுவது உண்மையின், அத்துவிதம் என்ற சோல்லே அந்நிய நாத்தியை உணர்த்தும் ஆயிற்று, ஆதலின், இவ்வான்மாக்கள் பலவும் முதல்வன்ருனேயாய் நிற்கும் என்றது.

வினு :- விடையை நன்கு விளக்கல் வேண்டும்.

விடை :- நன்கு விளக்குதல் இன்றியமையாததே. இவ்விடையில் அறியத்தக்கன (1). **'அத்துவிதம்'** என்னும் வடசோல்லின் போருள் ; (2). அதனுல் உணர்த்தப் படுவது ; (3) முதல்வன், ஆன்மாக்களே ஆதல் ; (4) முதல்வன்தானேயாதல் ; (5). முதல்வன் ஆன்மாக்களே தானேயாதல் ஆகிய ஐந்துமாம். அவற்றை ஒவ்வோன்ருக நன்கு விளக்கக்கேள்.

1. **அத்துவிதம்** (அ) 'வேதத்துள் அத்துவிதம் என்ற சோல்லே இம்மூன்றற்கும் பிரமாணம்'.

(ஆ) அ + து விதம், ந + து விதம், துவிதம் என்பது இரண்டு என்னும் போருளுடையது. 'அ' என்னும் நகரம்

1. இன்மை 2. மறுதலை 3. அன்மை என்னும் பல பொருளையும் தரும். அவற்றுள் '**அப்பிரகாசம்**' என்பதில் வருமொழிப்பொருளின் இன்மையை நகரம் உணர்த்திற்று. பிரகாசம் இல்லாதது என்றதாம்.

2. '**அதன்மம்**' என்பதில் வருமொழிப் பொருளின் மறுதலையை நகரம் உணர்த்திற்று. தன்மத்திற்கு மாறுனது என்றதாம்.

3. '**அப்பிராமணன்**' என்பதில் வருமொழிப் பொருளின் அன்மையை நகரம் உணர்த்திற்று. [இக்காலத்திற் பிராமணர் அல்லாதவர் என்று அரசர், வணிகர், வேளாளர் முதலோரைக் குறித்து (N. B. என) வழங்குகின்றது. அது பொருந்துமோ? திருமூலதேவர் பிராமணருட்கேட்டோரைப் பிராமணரல்லாதார் என்றுர்.

'' சத்தியம் இன்றித் தனிஞானம் தான்இன்றி
ஒத்த விடயம்விட் டோரும் உணர்வின்றிப்
பத்தியும் இன்றிப் பரனுண்மை யின்றிப்
பித்தேறி நின்றுர் பிராமணர் அலரே. ''

பிறர் பிராமணர் அல்லாதவரோ?.] இம் முப்பொருளில் நகரம் வருதல் உண்டு எனினும், இங்கு இம் முப்பொருளுள் 'அத்துவிதம்' என்பதில் எண்ணுப்பெயர்மேல் வந்த நகரம் அன்மைப் பொருள் மாத்திரையே யுணர்த்திப் போதுமையின் நிற்பது அன்றி ஏனைச் சோற்களின்மேல் வந்த நகரம்போல இன்மை மறுதலைப் பொருள்களையும் உணர்த்துதல் வழக்கின் கண் இன்மையின், அத்துவிதம் என்ற மோழிதானே பிறிது காரணம் வேண்டாது வேறன்மையை உணர்த்தி நிற்கும். இன்மைப் பொருள்பற்றி ஒன்று என்பதும் போருந்தாது; தானே தன்னை ஒன்று எனக் கருதல் வேண்டா; பிரமம் ஒன்று எனக் கருதும்போருள் வேருயிருத்தல் வேண்டும். அங்கனம் கருதும்போருள் வேறு ஒன்று உண்டு. ஆதலால் ஈண்டு இவ்வான்மாக்கள் பலவும் முதல்வன் ருனேயாய் நிற்கும் என மேற்கோண்டது.

சிவஞானபாடியத்துள் 'அத்துவிதம்' என்னும் சொல்லின் பொருள் ஆறுவது சூத்திரத்துரையிலும் விரித்துணர்த்தப்பட்டுளது, அதனையும் ஒரு சேரவுணர்தலால் இனிது விளங்கும் நலம் பெறலாம். அதனால் அப்பகுதியும் ஈண்டு எழுதலாயிற்று.

கேவலாத்துவிதிகள்

'அத்துவிதம் என்னும் சொல்லின் நகரம் இன்மை, அன்மை, மறுதலை என்னும் மூன்றனுள் ஒரு பொருளைப் பயக்கும். அவற்றுள், இன்மைப் பொருள்கொண்ட மாயாவாதிகள் இரண்டின்மை ஒரு பொருள்மாத்திரையின் அன்றி இரண்டு முதலியவாய் எண்ணப்படும் பொருள்களின் நில்லாமையான் அத்துவிதம் என்னும் சொற்குப்பொருள் ஒன்றெனபதேயாம் எனவும், ஒரு பொருளாயினும் குணகுணியென வேற்றுமை தோன்ற நிற்பிற் கேவலம் ஒன்றாதல் இன்மையின், அத்துவிதம் என்பது உபசாரச் சொல்லாய் முடியும் ஆகலின், தன்னின் வேறாய் ஒருபொருளும் இன்றித், தானும் குணமுடைப் பொருள் என விசேடிக்கப்படுதல் இன்றி, நிருவிசேடமாய் நிற்கும் பரப்பிரமப் பொருள் என்பது அத்துவிதம் என்னும் சொற்குப் பொருள் எனவும் கோடலின், அவர் 'கேவலாத்துவிதிகள்' என வழங்கப்படுவர்.

விசிட்டாத்துவிதிகள்

'இராமானுஜர் சிவாத்துவித சைவர் முதலியோரும் அவ்வாறே இன்மைப் பொருள்பற்றி ஒன்று எனப் பொருள் கொண்டு, சத்திசங்கற்பம் முதலிய குணங்கள் பரப்பிரமப் பொருட்கு உள என்று உபநிடதங்களிற் கூறுதலானும்; அவை செயற்கைக் குணம் என்றற்கு ஓர் இயைபு இன்மையானும்; பசு பாசங்களது உண்மையும் உபநிடதங்களுள் ஓதப்படுதலானும் அவற்றோடு முரணிக் கேவலாத்துவிதம் எனக் கோடல் பொருந்தாமையின், தன்னோடு இயைபுடைய பசு பாசங்களானும் தன் குணங்களாகிய சத்திசங்கற்ப

முதலியவற்ருனும் விசேடிக்கப்பட்டு விசிட்டமாய் நின்ற பரப்பிரமம் இரண்டில்லை; ஒன்று என்பதே அத்துவிதம் என்னும்சொற்குப் பொருள் என விசிட்டாத்துவிதம் கொடலின் அவர் 'விசிட்டாத்துவிதிகள்' என வழங்கப்படுவர்.' விசிட்டம் - அடை (மொழி) யுடையது.

பேதவாதிகள்

பேதவாதிகள் மறுதலைப் பொருள்பற்றி இரண்டன் மறுதலையாகிய ஒன்று எனப் பொருள் கொண்டு, அங்ஙனம் கொள்ளவே அவ்வொன்றன் மறுதலையாகிய இரண்டாவதும் உண்டு என்றற்கு இழுக்கு இன்மையின், 'அத்துவிதம்' என்பதும் 'துவிதம்' என்னும் பொருளைப் பயக்கும் என்று பேசுவர்.

அவர் (கேவலாத்துவிதிகள், விசிட்டாத்துவிதிகள், பேதவாதிகள்) எல்லாரும 'அத்துவிதம்' என்ற சொற்குப் பொருள் ஒன்று என்பதேயாம் எனக் கொண்டு தத்தம் மதங்களோடு முரணுமைப் பொருட்டுக் 'கேவலம்' என்றும்; விசிட்டம் என்றும் 'மறுதலை' என்றும் அடைகூட்டி இடர்ப்பட்டுப் பொருள் கொள்வர்.

அவருள் மாயாவாதிகள் கூறும் கேவலமும் பேத வாதிகள் கூறும் மறுதலையும் சுருதிகளோடு முரணுதலின், ஈண்டைக்கு ஏலாவாம்.

ஏனையோர் கூறும் விசிட்டம் என்பது பொருந்தும் ஆயினும் அத்துவிதம் என்னுஞ் சொற்குப் பொருள் ஒன்று எனக் கோடல் பொருந்தாது. என்னை? ஒன்று என்பது பொருளாயின், ஒன்றெனவே விளங்கக் கூறல் அமையும். அவ்வாறு (கூறல்) அன்றி, 'அத்துவிதம்' என உய்த் துணர வைத்து ஓத வேண்டாமையானும் ஒன்று எனப் பொருள் கொள்ளின் மகாவாக்கியப் பொருள் பயப்பதோர் விசேடம் இன்மையின் 'அத்துவிதம்' என்றது பற்றி ஆண்டு ஒரு பயன்படாமையானும் பொருந்தாது என்க.

சித்தாந்தசைவர் உரைக்கும் பொருள் :-

மகாவாக்கியப் பொருள்

1. அது நீயாகின்றாய் (தத்துவமசி)
2. அதுவானேன் (அஹம் பிரஹ்மாஸ்மி)
3. அது இது (அயம் ஆத்மா பிரஹ்மம்)
4. அது நான் (பிரஞ்ஞானம் ஆநந்தம் பிரஹ்மம்)

எனப் பொருள்படும் தத்துவமசி முதலிய மகாவாக்கியங்களின் பொருளே ஈண்டு எடுத்தோதினார். அதனால் 'அவையே தானேயாய்' என்றதில் உள்ள 'அவை' சடப் பிரபஞ்சத்தைக் குறியாது சேதனப் பிரபஞ்சத்தையே குறித்தது. மகாவாக்கியப்பொருள் ஆதலான் அன்றே பயனியலுள் 'அவனே தானே ஆகிய அந்நெறி' என்று இதை அநுவாதம் செய்து சுட்டியருளினார் ஆசிரியர்?

1. 'அது நீ ஆகின்றாய்' (முன்னிலை; தத்துவமஸி)

2. 'அது நான் ஆகின்றேன்' (தன்மை; அஹம் பிரஹ்மாஸ்மி)

3. 'அது இது ஆகின்றது' (படர்க்கை; அயம் ஆத்மா பிரஹ்மம் + பிரஞ்ஞானம் ஆநந்தம் பிரஹ்மம்.)

என மூவிடம்பற்றி நிகழும் மகாவாக்கியங்களைக் கேட்டவழி '**அது**' என்பது ஒரு பொருள் 'நீ' என்பது ஒரு பொருள் ஆதலின், ஒரு பொருள் மற்றொரு பொருள் ஆமாறு எவ்வாறு என்னும் ஐயம் உண்டாகும். அந்த ஐயம் நீக்குதற்கு எழுந்தது 'அத்துவிதம்' என்னும் சொல், அது இது ஆதற்கு ஏதுவாய் அவ்விரண்டிற்கும் உளதாகிய சம்பந்த விசேடம் உணர்த்துவதே '**அத்துவிதம்**' என்னும் சொற்குப் பொருள் என்று உணர்ந்துகொள்க.

அவ்வாறாயின், அத்துவிதம் என்னும் சொல்லாற் பெறப்படும் சம்பந்தம் 1. ஐக்கியமோ? 2. தாதான்மியமோ?

3. சமவாயமோ ? 4. சம்யோகமோ ? 5. சொரூபமோ ? 6. வேறே ?

ஆற்று நீரும் கடல் நீரும் தம்மிற் சேர்ந்தாற்போலவும் குடாகாயமும் மகாகாயமும் தம்மிற் சேர்ந்தாற்போலவும் ஐக்கியம். ஐக்கியமே அத்துவிதம் எனலாம்.

அப்படி ஆயின். அங்கனம் சேர்ந்த வழி ஒரு பொருளே ஆகலின் ஒன்று என்னுமல் அத்துவிதம் என்று உய்த்துணர வைத்தல் ஏன்? ஒன்ருன வழி, அதுவதுவாய் நின்று அறிதலாகிய ஆன்ம விலக்கணம் முத்திகாலத்தில் இல்லை எனப்பட்டு வழுவாகும். ஆதலின் அது பொருந்தாது.

குணத்திற்கும் குணிக்கும் (வெண்மைக்கும் பாலுக்கும்) உளதாகும் சம்பந்தம் போலும் தாதான்மியமே அத்துவிதம் எனலாம்.

ஆன்மா முதல்வனைப்போலக் குணிப்பொருளாய் நிற்பது அன்றி முதல்வனுக்குக் குணமாகாது. அதனுல் அவ்வாறு இயைதல் கூடாது. தாதான்மியத்தின் வேருய் நையாயிகர் கூறும் சமவாயம் என்பது ஒன்று இல்லை.

விரலும் விரலும் சேர்ந்து நின்ருற்போலச் சம்யோகமே அத்துவிதம்.

வியாபகப் பொருள்கட்கு அவ்வியாப்பிய விருத்தியாகிய சம்யோகம் கூடாது.

யாதானும் ஓர் இயைபு பற்றிக் கூறப்படும் சொரூபம் அத்துவிதம்.

அது மகாவாக்கியப் பொருளை வலியுறுத்துதற்கு எழுந்த '**அத்துவிதம்**' என்னுஞ் சொற்குப் பொருளாகாது. சொரூப சம்பந்த மாத்திரத்தால் சிவாநந்தத்தை அநுபவித்தல் கூடாது.

இவற்றின் வேருய் இன்னதேன்று அறிய வாராத அநிர்வசனம் அத்துவிதம்.

அங்கனம் கூறுதல் மாயாவாதி கூற்ருய் வழுவாகும்.

இத்தனையும் ஈண்டைக்கு ஏலாமையின், வேறு விடுக்குமாறு யாது ?

[1]ஒருபோருளே அவயவ அவயவிகளாயாவது குண குணிகளாயாவது வேற்றுமைப்பட்டு இரண்டாய் நிற்றற்கு ஏதுவானதும் '**தாதான்மியம்**' எனப்படும்.

[2]அதுபோல் இருபோருள் அதுவதுவாய் ஒற்றுமைப்பட்டு ஒன்ருய் நிற்றற்கு ஏதுவானதும் '**தாதான்மியம்**' எனப்படும்

இவ்வாறு தாதான்மிய சம்பந்தம் இருவகைப்படும். அவற்றுள் [1]முதலாவது '**தாதான்மியம்**' எனவும் [2]அடுத்தது '**அத்துவிதம்**' எனவும் வழங்கப்படும்.

'**அத்துவிதம்**' என்னும் சோல்லியல்பு மேற்கூறிய வாற்ருல் வேறு போருள் தருமாறின்றி அன்மைப் போருள் பற்றி இரண்டு அன்று என வேற்றுமைப் படாமையை விளக்கி நிற்கின்றது, அதனுல், இருபோருள் (சிவன் சீவன்) அதுவதுவாய் ஒற்றுமைப்பட்டு ஒன்ருய் நிற்றற்கு ஏதுவான தாதான்மியமே அத்துவிதம் ஆகும். ஆதலால்தான், ஆசிரியர் அத்துவிதம் என்ற சோல்லே அந்நிய நாத்தியை உணர்த்துமாயிற்று என்ருர். 'பிறிவரும் அத்துவிதம்' என்ற தோடரே பிறிதற்ருேழிலுக்கு மறுதலையான சேர்தல் என்னும் தோழிலையும் காட்டும். அதற்கு வினை முதல்ஆக இரு போருளையும் காட்டும். சேர்தல் பலராலும் நிகழும் எனினும், 'துவிதம்' என்றதால் ஈண்டுப் பலர் என்று கூறல் இயலாது.

ஐக்கியம் (கலப்பு) அபேத சம்பந்தம். தாதான்மியம் (உடனுதல்) பேதாபேத சம்பந்தம், சம்யோகம் (வேருதல்) பேதசம்பந்தம். அம்மூன்றும் தன் கண் தோன்ற நிற்றல்

பற்றி அம் மூன்றற்கும் பொதுவாகக் கூறப்படுவது இவ் **வித்துவிதம்.**

ஒவ்வோரிடங்களில் 'அலைகடலிற்சென்று அடங்கும் ஆறுபோல்'; 'வானகத்தில் வானும் மணத்தில் மணமும் போல' என அபேதவுவமை காட்டுவர்.

'பண்ணையும் ஓசையையும் போலப் பழமதுவும் எண்ணும் சுவையும்போல்'; 'நீரும் இரதமும்போல் ஆம் காண் அரனுர் அருள்' எனப் பேதாபேத வுவமை காட்டுவர்.

'இரும்பைக் காந்தம் வலித்தாற்போல் இயைந்து' எனப் பேதவுவமை காட்டுவர்.

ஒருபுடையோப்புமைபற்றி எடுத்துக்காட்டுவராதலின், தம்முள் முரணுவனபோல வேறுவேறு எடுத்துக்காட்டப் படும் இவைபற்றி மலைதல்கூடாது.

இம் மூன்று இயைபும் தன்கண் தோன்ற இவற்றிற்கு வேருய் நிற்கும் அத்துவிதத்திற்கு எடுத்துக்காட்டப்படும் சிறந்த உவமையாவது **ஆன்ம போதமும் கண்ணொளியும் தம்முள் அத்துவிதமாய் நிற்றல் ஆம்** என்று உணர்க.

சூத்திரம் 11 பார்க்க.

'**சுத்தாத்துவிதம்**' என்றது யாதானும் ஒன்றால் விசேடிக்கப்படாது நிற்றலால். ஏனையோர் அத்துவிதம் அடைமொழியின்றி இல்லை

(தொடரும்.)

பன்னெறி விளக்கம்

பெருநாவலர், களமூர், திரு. செ. செல்வப்ப முதலியார் பாடியது.

பூசையைக் காட்டுவர் காரிய தேசிகர் போங்குபறை
யோசையைக் காட்டுவ ரன்றிற் பிடிப்பவ ரோர்முறுக்கு
மீசையைக் காட்டுவர் வீரம்படிப்பவர் மேருவைநே
ராசையைக் காட்டுவர் மோசம்பின் செய்பவ ராரணங்கே.

தருமையில்

ஆடூர்ப் பாக்கியச் செட்டிமார் நிகழ்த்திய

குருவழிபாட்டில்

கயிலை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின்

அருளுரை

27—9—59

பகவானை நினைக்கச் சந்தர்ப்பம் தருவனவே இதுபோன்ற வழிபாடுகள். இன்று இங்கு நடந்த குருவழிபாட்டு விழாவை நம் அன்பிற்குரிய ஆடூர்ப்பாக்கியம் செட்டியார் பெருமக்கள் நிகழ்த்தினார்கள். இறைவனைப் போற்றும் தூய அன்புநெறி குரு, லிங்க, சங்கமம் என்று மூவகைப்படும். குருவழிபாடு இங்கே நடக்கப் பெற்றது இலிங்க வழிபாடு சொக்கப்பிரானுக்கு நடந்தது. இங்கே நடப்பதும், இனி நடக்க இருக்கும் மாகேசுவர பூஜையும் சங்கம வழிபாடுகள். ஆசாரியனிடத்துச் செலுத்தும் பக்தி, ஆசாரியன் வழியாக ஆண்டவனிடம் செலுத்தும் பக்தி அவனருள் விளக்கமாகத் திகழும் அடியார்களிடம் செலுத்தும் பக்தி என்ற இம் மூன்றுநிலையிலே உயர்ந்த மெய்யடியார்களையே பெரியபுராணத்திற் பார்க்கின்றோம். அழியும் பொருட்செல்வத்தை உயிர்நாடியாகக் கருதி அதை மதித்தொழுகுதல் போலவே அழியாத அருட் செல்வத்தில் அழுந்திய பற்றுக்கொள்ள வேண்டும். ஆசாரியன் உணர்த்தினால்தான் உணர முடியும்; 'உணர்த்த உணர்வேன்' என்று ஆதி பரமாசாரிய சுவாமிகளும் பணித்தருளியுள்ளார்கள். நம்முடைய வாழ்வியலில் வணங்க வேண்டிய கடவுளர்களாக மாதா. பிதா. குரு, தெய்வம் என்று அமைத்துள்ளார்கள். ஞானத்தையும் குழைத்து ஊட்டுகின்றாள் தாய்; தாய் காட்டத் தந்தையை உணர்கின்றது குழந்தை. அர்த்தநாரீசுவரர் திருக்கோலத்தில் அம்மையும் அப்பனுமாக இருந்து ஞானசம்பந்தப் பெருமானுக்குத் திருவருள் வழங்கினான் பெருமான். அளவில்லாத பக்தியும், நம்பிக்கையும் கொண்டு அன்புநெறியில் இயங்கவேண்டும். அவ்வாறு திளைப்பதற்கு

இந்நான்கு படிகள் வேண்டும். செந்தமிழ்ச் சொக்கலிங்கப் பெருமானை ஆன்மார்த்தசிவமாகக் கொண்ட ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் தம் குருநாதரைப் போற்று கின்றார்கள் :

" சித்தி தருநாதன் தென்கமலை வாழ்நாதன்
பத்தி தருநாதன் பரநாதன் — முத்திப்
பெருநாதன் ஞானப் பிரகாசன் உண்மை
தருநாதன் நங்குரு நாதன் "

அத்தகைய குருஉபதேசமே திருவருள்பெற ஏதுவாகும். இறைவன் கழலேத்தும் இன்பமே இன்பம் ; திருவருட் செல்வன் கழலேத்தும் செல்வமே செல்வம். பொருட்செல்வம் அழியுந் தன்மை உடையது.

" பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை " என்று நாயனார் கூறியுள்ளது உண்மையேயானாலும், பொருட் செல்வம் பயன்படவேண்டுமானால் திருவருள் இல்லையேல் முடியாது. ஆண்டவனுடைய அனுக்கிரகம் இல்லையானால் பொருள் நிலைக்காது. வாழ்நாளை வீணாக்காது அடியார்களைச் சேர்ந்து அருள்பெற முயலல் வேண்டும். வாணாளை வீணாக்கி விட்டால் அவனருள் பெற இயலாது.

அப்பர் சுவாமிகள் பூக்கொண்டு அவன் பொன்னடி போற்ற வேண்டும் என்கின்றார்கள் ; நாக்கைக்கொண்டு அவன் நாமம் நவில வேண்டும் ; அப்படி இல்லாமல் ஆக்கைக்கே இரைதேடி அலமந்தால் காக்கைக்கே இரையாகிக் கழியவேண்டுவதே என்று அருளுகின்றார்கள்.

" பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக் கேயிரை தேடி யலமந்து
காக்கைக் கேயிரை யாகிக் கழிவரே."

இன்று குருவழிபாட்டு விழாக் கொண்டாடும் செட்டிமார்கள் ஆடூர்ப் பாக்கியம் செட்டியார்கள் : பாக்கியம் என்றால் செல்வம். திருவருட் பாக்கியமே அரும்பெரும் பாக்கியம். ஆடூர் என்பது சிதம்பரம். கோபாலகிருஷ்ண பாரதியார் 'ஆட்டுக்காலை'ப் பற்றிப் பாடியுள்ளார். அந்த ஆடுங் கழலையே பாக்கியமாகப்

பெற்ற செட்டியார்களே ஆடூர்ப் பாக்கியச் செட்டியார்கள். முன்னோர் செய்த புண்ணியமும், எத்தனையோ பிறவிகளில் செய்த புண்ணியங்களுமே திருக்கயிலையை மிதிப்பதற்குத் துணைபுரியும்.

தொண்டு செய்வதற்கு யாரும் சளைக்கக்கூடாது. Service - என்பது உயர்வுதரும் என்பதிலே அழுந்திய நம்பிக்கை வேண்டும். ஏனென்றால் நிலையாமை உடைய யாக்கை இருக்கும் போதே இந்த யாக்கையாற் பிறர்க்குத் தொண்டு செய்தல் வேண்டும்.

"நெருநல் உளன் ஒருவன் இன்றில்லையென்னும்
பெருமை உடைத்திவ் வுலகு"

என்று நாயனார் கூறியுள்ளார்.

"அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்" என்ற திருமூலர், "கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந்தாரே" என்று முடிக்குமிடத்து யாக்கை நிலையாமையின் தன்மையை நன்கு விளக்கியுள்ளார். ஆதலால் இந்நிலையாமை உணர்ந்து நிலைத்த மெய்ப்பொருளை அறிந்து வாழ்தல் ஒவ்வொருவர் கடமையாகும். தெய்வநம்பிக்கை, மதநம்பிக்கை சாத்திரநம்பிக்கை வேண்டும். ஆசாரியப் பெருமக்களது அருட்பாக்கியமே பாக்கியம் என்ற அழுந்திய பற்று வேண்டும்.

திருக்கயிலை சென்று வழிபட்ட நம் ஆசாரியப் பெருந் தகையார்களின் வழி நடத்தல் வேண்டும். காரைக்காலம்மையார் பேயுருக்கொண்டு கயிலை சென்று பெருமானை வழிபட்டு வேண்டு கின்ற வரங்கள்: இறவாத இன்ப அன்பும், பிறவாமையும், பிறந்தால் அவனருளை மறவாமையும், ஆடுங்கோலத்துப் பெருமானடிக்கீழ் இருத்தலும் ஆகும். அவற்றைச் சேக்கிழார் பின்வரும் திருவிருத்தத்தால் பேசுகின்றார்:

"இறவாத இன்பஅன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் நின்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான்மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும்போதுன் னடியின்கீழிருக்க என்றார்."

சுந்தரமூர்த்திப் பெருமான் நொடித்தான்மலைப் பதிகத்து நுவலுஞ் சீரிய கருத்துக்கள் இங்கே எண்ணுதற்குரியன :

" மண்ணுலகிற் பிறந்து நும்மை வாழ்த்தும் வழி அடியார்
பொன்னுலகம் பெறுதல் தொண்டனேனின்று கண்டொழிந்தேன்"

" அரவொலி ஆகமங்கள் அறிவார்அறி தோத்திரங்கள்
விரவிய வேதவொலி விண்ணெலாம் வந்தெதிர்ந்திசைப்ப "

என்ற திருக்கயிலாயத்தின் அருள்மாட்சியை எண்ண வேண்டும். கயிலைநாதன் திருவடிகளை இமைப்பொழுதும் மறவாது வாழ்தல் வேண்டும்.

ஸ்ரீ குருஞானசம்பந்தப் பெருமான் திருவடிகளே நம்மை வாழ்விப்பன அப்பெருமான் குருவருளும், செந்தமிழ்ச் சொக்கர் திருவருளும் உலகெலாம் பரவவேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.

மாயூரம், ஆடூர்ப் பாக்கியச் செட்டிமார்கள்

பரம கருணாநிதியாக விளங்கும் எங்கள் குருநாதராகிய மகாசன்னிதானம் அவர்கள் இயற்றி வந்தருளும் சிவபுண்ணிய (தரும) நலங்களை எங்கள் நல்வினைப் பேற்றால் கண்டு பணிந்து உய்ந்து வருகின்றோம். திருக்கயிலாய யாத்திரையை நல்லன்பர்கள் புடைசூழ அயராத உறுதியோடு அவர் உள்ளன்புடன் அவனருள் துணைக்கொண்டு இயற்றி நிறவேற்றியுள்ளமை ஆதீன வரலாற்றிலேயே தலைசிறந்த பெருமையுடைத்தாய் விளங்குகின்றன.

தேவரீர் திருவடிகளைச் சிரத்திலும் சிந்தையிலும் தாங்கி மனமொழி மெய்களால் வணங்கிப் போற்றுகின்றோம். சீரணியும் நுதலின் விழி மழுமான் நாகம் திருந்தும் எரி பொருந்துவிடம் தெரிந்திடாமல் தாரணி அன்பரை யாள அவர்போல் வந்த சைவசிகாமணி யாகிய தேவரீரை உழுவலன்புடன் பணிந்து தங்களுடைய பேரருள் நல்லாசியைப்பெறுதலே எளியேங்கள் எளிய எண்ணம். வாழ்க திருக்கயிலாய பரம்பரைத் தருமை யாதீனக் கயிலைச் சந்நிதானம். வாழ்க ! வாழ்க ! வாழ்க !

தருமையில்
மாயூரப் பெருமக்கள் நிகழ்த்திய
குருவழிபாட்டில்

கயிலை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின்

அருளுரை

30—9—59

" ஆலங் தரித்த லிங்கம் ஆலவாய்ச் சோக்கலிங்கம்
மூலமாய் என்றும் முளைத்தலிங்கம் — பாலோளியாம்
மத்தனே கூடல் மதுராபுரி உமையாள்
அத்தனே ஆலவா யா. "

சைவப்பெருமக்களே !

இன்று ஞானசம்பந்தப் பெருமான் திருவருள் பேற்றுத் திகழும் இப் பெருநாளிலே சைவப் பெருமக்களின் அன்புவலைப் பட்டு நாம் இவ்விழாவுக்கு இசைந்தோம். குருவருளைப் பேற வேண்டும் என்ற பக்தி மேலீட்டாலே சிஷ்யர்கள் அனைவரும் கூடிச்சேய்யும் இந்த அன்புநிலை பாராட்டுக்குரிய ஒன்றாகும். பேருமக்கள் என்ற வார்த்தையை எல்லோருக்கும் சோல்லிவிட முடியுமா? அந்த வார்த்தையைச் சேக்கிழார் இடமறிந்து தரமறிந்து ஆளுகின்றார். சூலைநோயால் ஆட்கோள்ளப்பேற்ற அப்பரடிகளையும், ஞானப்பால் அருளி ஆட்கோள்ளப்பேற்ற திருஞானசம்பந்த மூர்த்தியையுமே இந்தப் 'பேருமக்கள்' என்ற சோல்லாற் குறிக்கின்றார்.

அப்பர் சுவாமிகள் காழிக்கு வருகின்றார்கள் என்ற சேய்தியைச் சேக்கிழார் சுவாமிகள் பாடத் தோடங்குகிறார்கள். தோண்டர் குழாம் புடைசூழத் தோழுத கரத்தோடு நீறு துதைந்த கோலம் கண்டவர் தம் மனம் கசிந்து கரைந்துருகும் கருணை போழிந்து காட்டத் தேண்டிரைவாய்க் கல்மிதப்பில் உகைத் தேறும் திருநாவுக்கரசர் வண்டமிழால் எழுதுமறை போழிந்த பிரானாராகிய திருஞானசம்பந்தரது திருப்புகலிமருங்கு சார்ந்தார். நீண்டவரை வில்லியார் வேஞ்சூலை மடுத்தருளி நேரே முன்னாள் ஆண்ட அரசு எழுந்தருளக் கேட்டருளிய ஆளுடைய பிள்ளை யாரும் காண்டலகைய பேருவிருப்போடு அன்பர் புடைசூழ எழுந்தருளி முன்னே வந்தார். ஆண்ட அரசு தோண்டர்



திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்
கயிலை ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களுக்கு
சென்னை ரயிலடியில் வரவேற்பு

தருமையாதீனம் சென்னை, சமயப் பிரசார நிலையத்தில் (வேளூர் தேவஸ்தான இறைபணி மன்றம்)



திருக்கயிலாய தரிசனம் செய்து எழுந்தருளிய தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் கயிலை ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களைக் கோலுவிருத்தி வழிபட்டு அன்பர்கள் பிரசாதம் பெறுதல்

குழாத்திடையே சென்று பழுதில் பெருங்காதலுடன் அடி பணிந்து அவர்தம் கரங்கள் பற்றி "அப்பரே" என, அவரும் "அடியேன்" என்று மொழிந்தார்.

"அம்பிகைசெம் பொற்கிண்ணத் தமுதஞானங் கொடுப்ப
அழுகை தீர்ந்த
செம்பவளவாய்ப் பிள்ளை திருநாவுக் கரசரெனச் சிறந்த கீர்த்தி
எம்பெருமக்களும் இயைந்த கூட்டதத்தில் அரனடியார்
இன்பம் எய்தி
உம்பர்களும் போற்றிசைப்பச் சிவம்பெருகும் ஒலிநிறைந்தார்
உலகம் எல்லாம்'

வில்லானது தோன்றும்போது நிமிர்ந்து பின் வளைந்து பின் நிமிரும் இயல்புடையது. அதனை 'நீண்டவரை வில்லியார்' என்றார் சேக்கிழார். அப்பர் சுவாமிகள் வாழ்வு தொடக்கத்தில் செம்மையாகி, பின் நெறிமாறிப் பின் செந்நெறியாயிற்று என்ற குறிப்பு இவ்வடைமொழியாற் றெளிவாகின்றது. "நேரே ஆட்கொண்டருளி" என்ற தொடர் சட்சு தீட்சையினைக் காட்டக் கூடியதாகும். சேக்கிழாரது காவியத்திலே ஓர் ஓவியமாக இருக்கக்கூடிய வரிகள் "அம்பிகை செம் பொற்கிண்ணத்து அமுத ஞானம் கொடுப்ப அழுகை தீர்ந்த செம்பவள வாய்ப் பிள்ளை" என்பன. இவ்விடத்து "எம்பெருமக்கள்" என்ற சொல்லைச் சேக்கிழார் பெய்துள்ள அருமைப்பாடு அறிந்து மகிழத்தக்கது.

சமயமும் அன்பும் சீவகாருண்யமும் இருந்தால்தான் மனிதன் ஆகலாம். நல்ல அடியார் கூட்டச் சேர்க்கை வேண்டும். உள்ளம் மலராவிட்டால் பல துன்பங்களிலும் சுழன்று தொலைப்படுவோம். இன்று இன்னுமொரு பெரு வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. இன்று அருணந்தி தேவர் திருநாள். சாத்திரப் பேராசிரியராகிய அப்பெருமானுடைய திருநட்சத்திரதினத்திலே இந்தக் குருவழிபாடு நிகழ்தல் பெரிதும் குறிப்பிடத்தக்கதாகும். 'கயிலாய பரம்பரையிற் சிவஞானசித்தி நெறிகாட்டும்' என்ற தொடர்க்குரிய அருள் விளக்கம் இங்கே நினைத்தற்குரியதாகும்.

இன்று நடந்த இந்த வரவேற்புக்கள் அனைத்தும் ஸ்ரீ குரு ஞானசம்பந்தப் பெருமான் அருள் விளக்கம் புரிந்த திறம்

உன்னற்குரியது. ஸ்ரீ குருஞானசம்பந்தர் பாண்டிய நாட்டி லிருந்து சோழநாடு வர, திருஞானசம்பந்தர் சோழநாட்டிலிருந்து பாண்டிய நாட்டிற்குச் சென்றார்கள். குருஞானசம்பந்தப் பெருமான் அருளிய அருணூல்கள் நம் வாழ்விற்குறுதுணை யாவன. எஞ்ஞான்றும் இதயத்தில் இருக்க வேண்டிய ஒரு உபதேசம்.

" பரபரக்க வேண்டாம் பலகாலும் சொன்னேன்
வரவரக்கண்டு ஆராய் மனமே - ஒருவருக்கும்
தீங்கு நினையாதே செய்நன்றி குன்றாதே
ஏங்கி இளையாதிரு "

கடமையை ஒழுங்காகச் செய்யவேண்டும். செய்தால் உரிமை தானே வரும். நம் ஆதீன வரலாற்றில் இதனைக் குறிக்க ஒரு சம்பவம் உண்டு. எல்லாம் அவன் செயல் என்ற உணர்ச்சி வரவேண்டும். திருவருள் தோன்ற வேண்டும். உள்ளத்திலே தூய்மை இருக்கவேண்டும்.

கயிலாய யாத்திரை அநுபவங்களைப்பற்றிப்பேச நா எழ வில்லை. அந்த அருளனுபவம் எடுத்துச் சொல்ல வியலாத பேரனுபவம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருநொடித்தான்மலைப் பதிகம் அவ்வனுபவ விளக்கம்.

" அரவொலி ஆகமங்கள் அறிவார்அறி தோத்திரங்கள்
விரவிய வேதவொலி விண்ணெலாம்வந் தெதிர்ந்திசைப்ப
வரமலி வாணன்வந்து வழிதந்தெனக் கேறுவதோர்
சிரமலியானை தந்தான் நொடித்தான்மலை உத்தமனே "

"மண்ணுலகிற் பிறந்து நும்மைவாழ்த்தும் வழியடியார்
பொன்னுலகம் பெறுதல் தொண்டனேன்இன்று கண்டொழிந்தேன் "

'யாக மாட்டு'ப் பிரயாணம், ஆறுபேர் தூக்கிச் செல்லும் தண்டிப் பயணம், கால்நடைப் பயணம் இப்படிப் பலவகை குகைகளில் வாசம்; அங்கே அட்டைகள்; காஞ்ஆறுச் செடிகள்; இதற் கிடையில் வெந்தும் வேகாத ரொட்டி - இப்படி ஒரு நிலை. யாத்திரை செல்வோர்க்குப் பொறுமை வேண்டும்; எல்லா வற்றையும் சகித்துக்கொள்ளும் திறம் வேண்டும்; கோபம் கூடாது.

சென்னைப் புகைவண்டி நிலையத்திலேயே அன்பர்களின் பேரன்பு எம்மைக் கவரத் தொடங்கிவிட்டது; அறத்துறையார் அன்பு அளவில் அடங்காது; இந்த அன்பையெல்லாம் ஆண்டவனிடம் செலுத்தித் திருவருள் பெறுங்கள் என்று ஆற்றுப்படுத்துகிறோம். அந்தத் திருவருளே அவ்வுலக இன்பமும் தரும்; இவ்வுலகப் பேறுகளையும் தரும். அன்பர்கள் எல்லோரும் சோக்கலிங்கப்பெருமான் திருவருளால் நல்லன பெருகி நீடுவாழ்க! வாழ்க!

" தன்னடைந்தார்க் கின்பங்கள் தருவானைத் தத்துவனைக்
கன்னடைந்த மதிற்பிரம புரத்துறையுங் காவலனை
முன்னடைந்தான் சம்பந்தன் மொழிபத்துமிவை வல்லார்
பொன்னடைந்தார் போகங்கள் பல அடைந்தார் புண்ணியரே "

மாயூரப் பெருமக்கள் அளித்த வரவேற்புரை

தலங்களுள் சந்நிதானம் பாராதது ஒன்றும் இராது கயிலையே தலங்களின் தலையானது. அத் தலைவரைத் தரிசித்த உண்மையை எதிர்காலத்தில் எல்லோரும் உணரத்தான், எங்கள் அருள் நந்தி மாமுனிவர் "கயிலைச் சந்நிதானம்" என்று வழங்க எங்களைப் பணித்தருளினார்கள். இத் திருவடி தோயாத திருத்தலம் இல்லை. திருக்கை வீசாத கோடையில்லை. திருவுள்ளம் அறியாத தியான விசேடம் இல்லை. ஆனந்த பரவசரை மறவாமல் ஆனந்த பரவசராயும் அதன் வழிபாட்டிலே மாசிலாமணியாயும், அவ்வப்போது உபதேசிக்கும் மாணிக்கவாசகர் ஆகியும் இமயமலை யாத்திரைகளால் எய்திய சச்சிதாநந்தர் ஆகியும், எப்பொழுதும் குருஞான சம்பந்தராயும் வீற்றிருக்கும் கயிலைச் சந்நிதானத்தை நாங்கள் எக்காலத்தும் மறவோம். இன்றே போல என்றும் இருந்தருள்க என்று பல்லாண்டு கூறிப் பணிவோம்.

" கருவேலை தன்னைக் கடப்பர் உலகில்
மருவாத இன்பத்துள் வைத்த—குருவின்
அடியார் அடியார் அடியார் அடியார்
அடியாரைச் சார்ந்த அவர். "

அன்பநாதபுரம் வகையரு அறநிலையத்தார்

“ ஈனசம்பந்தம் எல்லாம் ஓட்டும் ஞானசம்பந்த நல்லருள் திளைத்து
தேனெனச் சாத்திரம் தெளித்திடும் தெய்வத் திருவுருவமைந்த
செம்மலே வாழி !

பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும் புல்லறிவோராம் யாங்கள் தருமையம்பதியின் தவமுதற் குரவராம் குருஞானசம்பந்தர், ஆனந்த பரவசர் அன்பினில் விளைந்த அருட்சிவ குருவாம் தங்களைக் கண்டு தரிசித்து, அருளுரைகளையும், ஆசியுரைகளையும் கேட்டதன் பயனாய் அவ்வறிவுரைகளை நினைந்து நினைந்து அருள் வெள்ளத்தில் நனைந்து நனைந்து அவற்றில் புகட்டப்பட்ட பாடங்களை உணர்ந்து, உணர்ந்து, தங்கள் அருமை பெருமைகளை ஆட்சித் திறனை, ஞான நோக்கினை எண்ணி எண்ணிப் பூரிப்படைந்து மகிழ்கின்றோம். நாங்களெல்லோரும் தங்கள் கருணையைப் பாராட்ட மனமுவந்தருளிய பெருமையையும். ஈடு இணையற்ற புகழையும் எண்ணும்போது எங்கள் உள்ளங்கள் களிகொள்கின்றன. சிந்தை யெலாம் இனிக்கின்றது. ஆன்மவீரம் படைவீரத்தினும் பெரிதென்பதை நமது சமயாசாரியாராம் அப்பர் பெருமானார் அனுபவத்தில் காட்டிய அருஞ்செயலையே தங்கள் அருட் செங்கோலாட்சியிலும் அனுபவித்துக் காட்டி, பல இடையூறுகளைக் கடந்து, ஆன்மீக வீரத்தில் படை வீரத்தைப் பணியச் செய்து கயிலையங்கிரி யாத்திரையைக் கவினுற நிறைவேற்றிக் காட்டிய முனிபுங்கவராம் தாங்கள் எங்களுக்காகவும். இவ்விக வுலகிற்காகவும் பல்லாண்டு வாழ்ந்து, பதி, பசு, பாச விளக்கத்தைப் பயிற்றுவித்து “ கேளளி உரைத்திடும் பதி பசு பாசத்தின் கேள்விகளே ” என்ற மடாலய சம்பிரதாயப் பழமொழியைப் புதுமொழியாக்கித் தந்து, மக்கள் இறையருள் பெற்று இடரின்றி நல்வாழ்வு வாழ அருள்பாலித்து சிவராஜதானியாம் தருமபுரம், கயிலாயபுரமென்றே பேரும் புகழும் பெற்றுத் திகழுமாறு அருட்செங்கோல் செலுத்தி ஞானசிரியனாகப் பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு வாழப் பரமசிவனை, எல்லாம் வல்ல சித்தராம் செந்தமிழ்ச் சொக்கநாதரை மன, மொழி, மெய்களால் சிந்தித்து, வந்தித்து உருகி சிரந்தாழ்த்திக் கரங்கூப்பி வணங்கி இறைஞ்சுகின்றோம்.

திருவையாற்றில்

கயிலை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின்

அருளாசி

28—9—59

ஐயாறு தென்கயிலாயத் திருத்தலம். அப்பர் சுவாமிகள் கயிலாயக் காட்சியைத் தரிசித்த சிறப்பு இத் தலத்திற்கு உண்டு. கயிலாயப் பெருமான் திருவருள் வழியும் இத்திருத்தலத்தே அன்பர்கள் காட்டிய பேரன்பு அளவிடற்கரியது. ஆலயங் களின் சேவை அரசாங்கத்தின் ஆதரவிலேயே பெருக முடியும். சேக்கிழார் சுவாமிகள் மனுநீதிச் சோழன் ஆட்சிச் சிறப்பைப் பேசுமிடத்து மிக அருமையான விளக்கம் ஒன்று அருளி யுள்ளார்கள்.

இவ்வூர்ப் பஞ்சாயத்து போர்டு சார்பாகவும், மண்டல காங்கிரஸ் சார்பாகவும், சைவ சங்கத்தின் சார்பாகவும், இளைஞர் காங்கிரஸ் சார்பாகவும் வரவேற்புக்கள் வாசித்தளிக்கப்பட்டன. இவையனைத்தும் அரசாங்கச் சார்பு அறநிலையத் தொண்டுகட்கு இருந்தால் மேலும் சிறக்கு மென்பதைக் காட்டுவதாகும். சமுதாயம் வாழ அரசியல் சிறப்பாக அமைதல் வேண்டும். அரசியலும் சமயமும் இணைந்து தொண்டாற்றுதல் வேண்டும். தனி மனிதன் ஆன்மீக சுதந்திரமும், வாழ்க்கைச் சுதந்திரமும் அரசுகாவலைப் பொறுத்தே உள்ளன. அதனால்தான் சேக்கிழார் சுவாமிகள் ' அருமந்த அரசாட்சி அரிதோ மற்றெளிதோதான் ' என்று கூறுகின்றார்கள்.

இத் திருத்தலம் கயிலை செல்ல இயலாதவர்களுக்கும் கயிலைக் காட்சி வழங்கும் திருத்தலமாகத் திகழ்கின்றது. இங்கு வந்து தரிசித்தபின்பே எமக்கும் வடகயிலைப் பரமன் திருத்தரி சனம் கிட்டிற்று. இவ்வருளிப்பாடு எண்ணி மகிழ்தற்கு உரியது.

திருவருள் தோய்வோடு வழிபட்டால் என்றும் எதிலும் வெற்றியே விளையும்; இடையூறுகள் வந்தாலும் அவை

யனைத்தும் திருவருளாற்றலால் தூளாகிப்போம். ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே' என்றும், 'ஆலவாயான் நிற்கவே' என்றும் அருளிய ஆசாரியப் பெருமக்கள் அருள் மொழிகளே நம்மை ஆதாரமாகக் காக்கும் தன்மை உடையவை. உண்மைத் தமிழர் ஒவ்வொருவரும் தெய்வபக்தியும், அதனால் விளைந்த பண்பாடும் அவற்றுக் கடிப்படையாக நல்லொழுக்கமும் உடையோராகத் துலங்குதல் வேண்டும்.

இன்று இங்கு நற்செயலில் ஈடுபட்ட அன்பர்கள் அனைவரும் நல்லன எல்லாம் பெற்று நீடுவாழ - கயிலாயநாதன் திருவருள் பெருக செந்தமிழ்ச் சொக்கர் சேவடி சிந்திக்கின்றோம்.

தேவஸ்தானச் சார்பில்

28—9—59 திங்கட்கிழமை அன்று குருமாமணியின்

திருவடிக்கண் சார்த்திப் போற்றி புனைந்த

வரவேற்பு மலர்

திருவையாற்றில் திகழ்மகா லிங்கம்
ஒருவை யகத்துக் கொருபெருங் கோயிலைக்
கொண்டெழுந் தெழூர் கோவும் மேவத்
தண்டோடும் எழுசீர்த் தலங்களும் உலவி
மக்களை யுய்யும் வழியுய்த் தாட்கொள்ளும்
மிக்க அருளினும் விழுமிய தில்லை
அதுபோல் உலகில் அமைவுறுக் தலமெலாம்
இதுவோ யாம்கண் டிறைஞ்சிய தெனும்நின்
பெருமைக் கிணையிலை பேருல கினில்நின்
அருமைத் தவத்தினும் அறத்தினும் அன்பினும்
அருச்சனை அபிடே காதிய சிறப்பினும்
உருச்சன மெல்லாம் உய்வழி மொழியினும்
திருமுறை யுரையொடு திகழ்வெளி யீட்டினும்
திருமுறை விழாமிகச் செய்யும்நன் னெறியினும்
இலக்கம் கோடி யெண்ணுறச் செய்துளக்
கலக்கம் கோடிக் கழியத் தொழுவோர்

அருணலம் ஆயுள் ஆரோக் கியமிகு
பொருணலம் எய்தப் புரிவேள் வியினும்
சட்டைநா தருக்கும் சம்பந்த மூர்த்திக்கும்
நெட்டயில் வேற்கை நிமலன் செல்வ
முத்துக் குமாரனும் முதுபெருங் குருவுக்கும்
எத்திக் கும்புகழ்ந் தேத்தத் திருவிழாப்
புரியும் ஒப்பிலாப் புண்ணியப் பெருக்கினும்
பரியும் நரியும் படிமிசைக் காட்டிய
சொக்கலிங் கேசனைத் தொழும்பே ரன்பினும்
மிக்க சற் குருவாய் விளங்கும் முதல்வா
வருக வருக மாண்புளோய் வாழ்க
தருகநின் தாமரைத் தண்மலர்க் கடைக்கண்
பெருகநின் புகழெலாம் பெருங்கட லுலகெலாம்
இருகழ லிணையுமென் இதயத் திருத்தி
வணங்கும் அடியனேன் மனத்தினை உருக்கி
இணங்கும் நின்னுரு வெழிலையே நிறுத்திச்
சிறிதும் பிறழாத் தியானப் பொருளாய்ச்
செறிதுங் கவனே சிறந்தினிது வாழ்க
கயிலையைக் கண்டு களித்துவாழ் பெருமை
குயிலையெய் திரும்பொழில் குலவும் தருமைக்
குருமணிக் கன்றியிக் குவலயத் தென்றும்
ஒருமணிக்கும்வாய்ப் புற்றதின் றென்னஅம்
மலைபோல் விளங்கும் மாட்சியோய் வாழ்க
தலைபோல்விழுமிய தரும மூர்த்தியே
வாழ்க வாழ்க மெய் வளத்தொடும்
வாழ்க பல்லூழி மாநிலம் தொழவே

வாழ்க, வாழ்க, வாழ்க.

அடியன்,

திருவையாறு
தேவஸ்தானம்,
27—9—59.

வித்துவான். மகாலிங்கத் தம்பிரான்
கட்டளை விசாரணை.

திருவையாறு மண்டல காங்கிரஸ் கமிட்டியார்

தேசப்பணிகள் தூய்மையாய் திகழ நிறைபணிகள் பல புரிந்தோய் வருக !

என்கடன் பணிசெய்து கிடப்பதே என்றார், அப்பர் பெருமான். மக்களுக்கு சேவை செய்வதே வாழ்க்கையின் லக்ஷியம் என்றார் தேசப்பிதா மகாத்மா காந்தியடிகள். இத் தகைய பெருந்தகைகளின் பொன்மொழிகளை நினைவுறுத்தி, அனாதை மாணவரில்லம், பல்கலைக் கல்லூரி, மருத்துவச்சாலை, ஆகம பாடசாலை தேவார வகுப்புகள், திருமுறை மகாநாடுகள், சமயச் சொற்பொழிவு சபைகள் நடத்தியும் திருவாசகம் முதலிய அரும்பெரும் பக்தி நூல்கள் வெளியிடுதல் முதலிய அரும் பணிகளைத் தாங்கள் செய்துவருவதுபாரதநாட்டின்முன்னேற்றத் திற்கும், கீர்த்திக்கும் மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவது கண்டு பெருமிதமடைகின்றோம்.

திருவையாறு சைவ மகாஜன சங்கத்தார்

நமது சைவ சமயம் வளர்வதற்கே காரணமாயுள்ள தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் திருவையாற் றுக்கு எழுந்தருளுவது கேட்டு மக்களுய்வான்வேண்டி கயிலைக் காட்சி கண்டு எழுந்தருளும் குருமகாசந்நிதானத்தை சைவ மகாஜன சங்கத்தார்கள் புத்துயிர் பெற்றுப் புனிதவாழ்வு வாழுநாளின்று ளென்றே உளமகிழ்வுடன் வரவேற்கலானோம்.

திருவையாறு ஊராட்சி மன்றத்தார்

ஆன்ம நேய வொருமை யதற்காம்
பாட்டினை மேற்கொளும் பரம யோகீ !
இத்தரை போற்றும் எழிற் கயிலாய
மலைதனைக் கண்டருள் மாபெருந் தவநிதி !
காட்சிக் கினிய கவினுறு குரவ !
மாநிலப் பெருநகர் மன்னிய சிறுநகர்
ஆட்சி புரிபவர்க் காகுநல் லுரைகளை
மாட்சியோடு வழங்கு மாபெரும் வள்ளால் !

அந்த ஞான ! அந்த ஞான !
நந்தி மரபினில் வந்த வதரித்த
சிந்தாமணியே ! செந் தமிழ் வாணரை
என்றும் புரக்கும் எந்தாய் வருக
நல்லாறு படீஇய நற்றவ வாணநீ !
வாழி பல்லாண்டே வாழியர் நெடிதே.

திருவையாற்றுப் பெருமக்கள்

காசினி போற்றும் காசியம் பதிமுதல்
கடுக்கவின் கண்டன் கவினுறும் பதிகள்
கண்டே மகிழ்ந்தனை யண்டரு மணுகாத்
திருக்கயி லாய திருமலை தன்னை
உளத்திலு முன்னற் கரிய வெம்பிரான்
அம்மையோ டமர்ந்தருள் புரிவதை யன்போடும்
பரவிடல் வேண்டும் பரவிடல் வேண்டும்
என்னும் பற்றினால் இடர்பல களைந்து
கண்டு வந்தனை கண்டு வந்தனை
அன்று துவங்கி மன்ற வாணனை
கூடற் பரமனை குருதிரு வருளினை
கண்டருள் நிமல கயிலை வாசி
என்னுந் திருப்பெயர் இயம்பப் பெற்றனை
கயிலையிலிருந்த கவினுறு கோலங்
கண்டா லன்றிக் கழியுடல் கொண்டே
மீளே னென்ற மீளிவா கீசற்
கன்று திருவை யாற்றிற் காட்டிய
வாற்றினை மேற்கோளீஇ ஆற்றல் சான்ற
வடதேன் கயிலை மன்னிய பதிக
நூலினைப் பதித்து நுவன்றிடச் செய்தனை
கயிலை யாத்திரை கண்டருள் செய்த
மாசிலா மணியே ! மகிழ்வோடும் எங்கள்
அன்பார் அழைப்பிற் கமைந்தருள் புரிந்தனை
ஐயா றுறையும் அன்பர்செய் தவந்தான்
எத்துணைப் பெரிதென இயம்பவும் பெறுமோ
புண்ணிய வுருவே ! நண்ணிய குரவநீ
வாழிபல் லாண்டே வாழிபல்லாண்டே

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்துக்கு வரவேற்பு

சிதம்பரம் பெருமக்கள் நிகழ்த்திய குருவழிபாட்டு விழாவில்
டாக்டர், திரு. அரங்கசாமிப் பிள்ளை M.B.B.S. அவர்கள்
2—10—59 இல் நிகழ்த்திய

வரவேற்புரை

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கட்கு அநேக கோடி வணக்கம். பண்புமிக்க தலைவர் அவர்களே! தில்லைவாழ் அந்தணர்களே! அன்புமிக்க பெரியோர்களே! இன்று கயிலை சென்று வந்த குருமகாசந்நிதானம் அவர்கள் தில்லை ஈசனுடைய திருவருளைப் பெற வரும்போது எங்கள் அழைப்பிற்கு இணங்கி அன்புகூர்ந்து இங்கு வந்து அமர்ந்து இந்தப் பாராட்டு விழாவிற்கு வந்தமைக்கு நாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம். நாங்கள் இதற்கு அவர்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறோம். மேலும் எங்கள் அழைப்பிற்கிணங்கி மாயூரம், காழி, வைத்தீஸ்வரன்கோயில் முதலிய ஊர்களிலிருந்தும் காலத்தின் அருமையைக் கருதாமல் வந்து இங்கு அமர்ந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் எல்லோரையும், பாராட்டுக்குழுவின் சார்பாக வருக வருக என்று, கரங்கூப்பி சிரந்தாழ்த்தி வரவேற்கின்றேன்.

இன்று மாலை குருமகாசந்நிதானம் அவர்கள் அங்குவந்து இறங்கி சிவிகைமேல் ஏறி பவனிவந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாக அமைந்திருந்தது. இன்று அவர்கள் கயிலைக்குச் சென்று வந்த காரணத்தினால் நாம் இங்கு பாராட்டுவதோடு, பல ஆண்டுகளாக அவர்கள் இங்கு வந்த சந்தர்ப்பத்தில் பாராட்ட வேண்டுமென்று எல்லோர்க்கும் பேரவாவாக இருந்தது. அது இன்றுதான் நிறைவேறியது. இந்த நாளை தில்லைச் சரித்திரத்தில் புனிதப் பொன்னாளாகப் போற்ற வேண்டும். நமது சந்நிதானம் அவர்கள் ஆழ்ந்த அறிவுடையவர்கள்! நிறைந்த அனுபவம் உடையவர்கள். குணமென்னும் குன்றேறி நின்றவர்கள். பழமையைப் பாதுகாப்பவர்கள். புதுமையையும் அனுசரித்து நடப்பவர்கள்.

அவர்கள்செய்யும் நல்லறங்களைப்பற்றி என்னைப்போலுள்ளவர்கள் சொல்லுவதென்றால் அது மிகவும் சாதாரணகாரியமல்ல

சென்னை மாநிலத்தின் தலைநகரிலே தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான மடத்தை நிறுவி அதில் நுண்ணிய அறிவுடையவரும் ஆழ்ந்த ஆராய்ச்சியாளரும், சொல்வன்மை மிக்கவருமாகிய வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்களை வைத்துத் தமிழையும் சைவத்தையும் வளர்ப்பது தமிழ்நாடு செய்த தவப்பயனேயாகும்.

குருமகாசந்நிதானம் அவர்கள் செய்த திருப்பணிகளும் குடமுழுக்குகளும் எண்ணற்றவை. அதில் அவர்கட்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை என்றே சொல்லலாம். அத்தகைய அரும்பேர் அறங்களை எல்லாம் செய்தவர்கள் பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல என்ற இலக்கணத்திற்கேற்ப அநேக அனாதை இல்லம்வைத்தியசாலை, நூல் நிலையங்கள் இவைபோன்ற பற்பல நல்லறங்களைச் செய்வது மிகவும் போற்றத்தக்கது. அவர்கள் இறைவனது அருளைப் பரிபூரணமாகப் பெற்றவர்கள்.

நாள்தோறும் தமது பூசையில் சொக்கநாதனை வைத்து ஆராதனை செய்பவர்கள். அன்னை அபிராமி சுந்தரியின் அருளைப் பரிபூரணமாகப் பெற்றவர்கள். முத்துக்குமாரக் கடவுளையும், ஞானசம்பந்தரையும் தமது சிந்தையிலேயே வைத்துப் பூசிப்பவர்கள். ஆகவே அவர்கள் இறைவன் அருளை நன்றாகப் பெற்றவர்கள். அருளைப் பெற்றதோடு பொருள்களெல்லாம் நிறையப் பெற்றவர்கள். நமது தமிழ்நாட்டு மூவேந்தர்களோடு ஒன்றாக வைத்து எண்ணக்கூடிய செல்வம் படைத்தவர்கள். அவர்களிடம் பல்லாயிரக்கணக்கான மக்கள் அவர்களை அண்டி இன்பவாழ்வு அடைகிறார்கள். அங்கு சைவம் தழைக்கிறது. தமிழ் வளர்கிறது. கலை வளர்கிறது, என்று சொல்லும்போது அவர்களைப்போல் அத்தகைய செல்வம் படைத்தவர்கள்தான் பலர் நாட்டிற்கு தேவை என்று நன்றாகத்தெரிகிறது.

அண்மையில் நம்மைவிட்டகன்ற ஆடூர் பெரியப்பிள்ளை அவர்கள் இல்லாவிட்டால் இந்த எழில்மிக்க பெரியகோயில் கும்பாபிஷேகம் நடக்காது. அதுபோல் நமது மதிப்பிற்குரிய அன்பின் உருவாய வணிகர் திலகம் ஆக விளங்கும் இரத்தின சாமிச் செட்டியார் அவர்கள் இல்லை என்றால் நம் ஊரில் சைவம் தழைக்காது. பக்தி வளராது. ஆகையால் இத்தகைய செல்வர்கள் நிறைய இருக்கவேண்டும். செல்வர்களுடைய

செல்வங்களையெல்லாம் பிடுங்கி பல்லாயிரக்கணக்கான மக்களுக்குக் கொடுப்பதென்றால் அதுபற்றிப் பேசினால் அது அரசியலாகும். இப்பொழுது பக்திவ்யலில் இருக்கும்போது இது தேவையில்லை. இத்தகைய அருளும் பொருளும் படைத்த அவர்கள் அண்மையில் கயிலைக்குச் சென்றார்கள். ஏன்? அதுதான் அழகுக்கு அழகு செய்வது. பெருமைக்குப் பெருமை தருவது. சாதாரணஅளவில் 24 மணி நேரத்தில் ஜெனீவா செல்லலாம். 36 மணி நேரத்தில் இலண்டன் போகலாம், 48 மணி நேரத்தில் நியூயார்க்கிற்குப் பறக்கலாம். மூன்று நாட்களில் உலகையே சுற்றலாம். ஆனால் கயிலைக்குச் செல்வது அவ்வளவு சுலபமல்ல. அதற்கு மனஉறுதியும் உடல் உறுதியும், இறைவன் திருவருளும் வேண்டும். நமது சந்நிதானம் அவர்கள் இறைவன் திருவருளைப் பெற்றவர்கள். சந்நிதானம் கயிலை செல்லும்போது, மெய்வருத்தம் பாராது, பசிநோக்காது கண் துஞ்சாது மலைமேலேறி மடுவிலிறங்கி, குளிரால் வாடி பலப்பல நூற்றுக்கணக்கான மைல்கள் நடந்துசென்று கயிலை நாதனைத் தரிசித்தார்கள். நேராக நேற்றுத் தென்கயிலாயத் திற்குச்சென்று இன்று தில்லைக்கு வந்துள்ளார்கள். அவர்களைப் பாராட்டுவதால் நாம் மிகவும் பெருமையடைகிறோம். அவர்களை வாழ்த்தவேண்டும்.

பெரியோர்கள் சிறியோர்களை வாழ்த்தவேண்டும். சிறியோர் கள் பெரியோர்களை வணங்கவேண்டும். ஒரு முகம் படைத்த நாம் ஆறுமுகக் கடவுளை அன்றாடம் வாழ்த்துகிறோம். இருகரம் படைத்தநாம் பன்னிரு கரமுடைய வெற்றிவேலனை வாயார வாழ்த்துகிறோம். துன்பத்திலே துய்க்கின்ற நாம், இன்ப வெளி யிலே ஆநந்த நடனம் ஆடுகின்ற தில்லைக் கூத்தப்பெருமானை நாள்தோறும் வழிபட்டு வணங்கி வாழ்த்துகின்றோம். ஏனென் றால், எங்கும் நிறைந்த ஒரு பொருளை எல்லாவற்றையும் நமக்கு கொடுக்கக்கூடிய பொருளை நாம் வாழ்த்துவதனாலே நமது வாழ்விலே இன்பம்பெருகுகிறது. அவர்களுடையநல்லாசியையும் அருளையும் பெறுகிறோம். அருள் நல்லாசியும், அருளும் இருக்கு மானால், பக்தி உண்டாகிறது. பக்தியிருந்தால் பயம் உண்டா கிறது. பயமும் பக்தியும் இருந்தால் உள்ளம் தூய்மைஅடையும். உள்ளத் தூய்மையால் செல்வம் கிட்டும். செல்வம் இருந்தால் தான் இவ்வுலகில் எல்லா நலங்களையும் பெறலாம். ஒவ்வொரு வரும் இப்படிச் சிறந்திருந்தால் நாடேபெருகி உயரும்.

அதற்காகத்தான் நாம் தினமும் இறைவனை வணங்க வேண்டும். குருவைத் தரிசித்து குருபக்தியுடன் எல்லாவற்றையும் நடத்தவேண்டும். ஆகவே அத்தகைய குருமகாசந்நிதானம் அவர்களை நாம் வாழ்த்தக் கூடி இருக்கின்றோம். அவர்கள் இன்றுபோல் பல்லாண்டுகள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து நம் உள்ளத்துள் வாழ எல்லாம் வல்ல இறைவனை, கருநட்ட கண்டனை, அண்டத்தலைவனை தில்லைக்கு இறையை இறைஞ்சிக் கொண்டு என் சிற்றுரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

சிதம்பரம் பாராட்டுக் குழுவினரின் வரவேற்புரை

அருள் சேர்ந்த நெஞ்சினர்க்கு ஒளி சேர்ந்த இனிய கயிலாயம் என்னும் சிவலோக தரிசனம் கிடைத்தது எவ்வாற்றாலும் வியப்பாகாது. 'அருள் ஆள்வார்க்கு அல்லல் இல்லை' அன்றோ! இருமைவகை தெரிந்து ஈண்டு அறம் பூண்ட கயிலைக் குருமகாசந்நிதானத்தின் பெருமையே இவ்வுலகில் விளங்கிற்று. இதில் என்ன வியப்பு? கயிலைச் சந்நிதானத்தில் எண்ணுவன எல்லாம் எண்ணியவாறே நிறைவுறுதல் என்றும் உள்ள உண்மை. சொல்லிய எல்லாம் சொல்லியவாறே நிகழ்த்தல் பலர்க்கும் தெரிந்ததாகும். அது நிறைமொழி. நிறைமொழிக் குருமணியின் பெருமைகளை இந்நிலத்தில் அவர்கள் செய்யும் செயற்கு அரிய செயல்களே காட்டி வருகின்றன. திருச்சிற்றம்பலத்தை வழிபடுவார்க்குப் பூரண சுகம் வாய்த்திருப்பதே அடையாளம். தருமைக் குருமுதல்வரும் அடியாருட் சிறந்த குமாரகுருபரரும் தில்லையில் வந்து பெற்ற அருளுக்கு எல்லையில்லை. எங்கள் தில்லைச் சந்நிதானமே இந்தக் கயிலைச் சந்நிதானம் என்பதை அறியாதார் சிலரே ஆவர்.

தில்லைத் திருமுறைக் கழகத்தார் சார்பில் ஆ. சு. கணபதிப் பிள்ளை

கயிலாய சிகரங்கண்ட கடவுளர் சிரமும் போற்றி
கார்காத்த குருமுதல்வர் கழல்களார் கண்கள் போற்றி
கின்னரர்கள் கீதங்கேட்ட கேள்விசேர் செவிகள் போற்றி
கீர்த்திநிறை ஒளியாம்மரத்தின் வாசமார் நாசி போற்றி
குன்றுவலம் வரத்திருமுறைகள் கூறுநல் வாயும் போற்றி
கூத்தர்திரு உருவுட்கொண்ட குறைவிலா நெஞ்சம் போற்றி
கெழுவுதகை யன்பர்க்கீயும் கீர்த்தியாம் கரங்கள் போற்றி
கேத்திரங்கள் பலவுங்கண்ட கிளரொளி யாக்கை போற்றி
கைலாயம் வலம்வந்திட்ட கழலணி பாதம் போற்றி
கொன்றையார் மெய்த்தொண்டர்தம் குழுவிடம் உறவே போற்றி
கோதுர்க்கைப் பதினெண்ணுங்கை குலவுசெம் மாப்பு போற்றி
கௌரிசேர் கருணைசொக்கர் கங்கைகைக் கண்டோய் போற்றி

வேதாந்தவித்தகரின் பாராட்டுரை

தருமபுர ஆதீனம் 25 ஆவது கயிலைக் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் செப்டம்பர் 11ம் தேதி 'வேதாந்த வித்தகர்' எனும் பட்டம் வழங்கியபோழுது, டாக்டர் திரு. டி.எம்.பி.மகாதேவன் M. A. Phd., அவர்கள் பேசிய பாராட்டுரையின் சாராம்சம்.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள், தமது செயற்கரிய திருக்கயிலாய யாத்திரையை இறைவனருளால் நன்று முடித்துக் கொண்டு காசி க்ஷேத்திரத்தை யடைந்தபொழுது, இவ் வருஷத்திய ஆவணிமூல விழாவன்று எனக்குப் பட்டமளிக்க சங்கல்பித்துக் கொண்டதாகக் கேள்வியுற்று அகமகிழ்ந்தேன். சில நாட்களுக்கு முன்னர், இவ்விழாவிற்கு அழைப்பு வந்த பொழுது ஈசனின் திருவுள்ளம் என்றெண்ணி இன்று இங்கு வந்து பட்டம்பெற சம்மதித்தேன்.

திருக்கயிலாய யாத்திரை சென்று திரும்பியவுடன் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு, எனக்கு பட்டமளிக்க வேண்டு மென்ற எண்ணம் உதித்தது ஒரு விசேஷ[illegible]

மற்றொரு சிறப்பு ஆவணிமூலப் புனிதத் தினத்தன்று இப் பட்டம் வழங்கப்படுவது, திருக்கயிலாய பரிக்கிரமம் எளிதில் கிடைக்கும் பாக்கியமன்று. மலைகளுக்கெல்லாம் தலைசிறந்து விளங்குவது இமயம். இமயத்தின் சிகரங்களுக்கெல்லாம் உன்னதமானது திருக்கயிலாயம்.

பல சிகரங்கள் சூழ்ந்திருப்பினும் கயிலயங்கிரி தனி மகத் துவம் வாய்ந்ததென்பது யாவரும் அறிந்த விஷயமே. இம் மலையின் உருவமே பனி உறைந்த லிங்காகாரம். இதற்கு நிகரான ஒரு காட்சியைத் தென்னாட்டிலுள்ள திருவண்ணாமலையில் காணலாம். அநேக குன்றுகள் இங்குமங்குமாக சிதறிக்கிடக்க தனிச் சோபையுடன் விளங்குகின்றது அருணாசலம். இம் மலையும் லிங்காகாரமாகத் தோற்றமளிக்கிறது. இமயத்திலுள்ள கயிலாயம் பனிமலை. தெற்கேயுள்ள அருணாசலம் அக்னிமலை. எந்தப் பரம்பொருள் உலகத்துக்கு உஷ்ணம் தருகிறதோ,

அதுவேதான் தண்மையையும் அளிக்கிறது. எது சுயம்சோதி சோரூபமாயுளதோ அதுவே ஆனந்தமாயுமிருக்கின்றது. உப நிடதங்கள் கூறும் "சாந்தம் சிவம் சுந்தரம்" யென்னும் பரம்பொருள் கயிலயங்கிரியாகவும் அருணகிரியாகவும் காட்சி தந்து நம்மைப் புனிதமாக்குகின்றது.

இமயத்திற்குச் சென்றால் ஏதோ ஒருவேறு உலகத்திலிருப்ப தாக நமக்குத் தோன்றுகின்றது. மூன்று வருஷங்களுக்கு முன்னால் பதரிகாசிரமத்திற்குச் சென்றபொழுது எனக்கும் இவ் வனுபவம் உண்டாயிற்று. ரிஷிகேசத்தை யடைந்தவுடனேயே, நாள், கிழமை உலகவிவகாரம் இவைகளை மறந்துவிடுகிறோம்.

இமயப் பிரதேசத்தின் மேல் செல்லச் செல்ல காலம் போவதே தெரிவது கிடையாது. இயற்கையிலேயே துலங்கும் தெய்வத்தன்மையில் மெய்மறந்து விடுகிறோம். பதரி க்ஷேத் திரத்திலேயே இத்தகைய அநுபவங்கள் ஏற்படுமாகில் கயிலை யங்கிரி பிரதேசத்தின் அநுபவத்தைப்பற்றி நாம் ஒருவாறு ஊகித்துக்கொள்ள முடியும்.

ஆசார்ய சங்கரர் "சிவாநந்த லஹரியில்" கயிலாயவநுப வத்தை வெகு அத்புதமாக சித்தரித்துக் காண்பித்திருக்கின்றார்.

> कदा वा कैलासे कनकमणिसौधे सह गणै -
> र्वसञ्शंभोरग्रे स्फुटघटित मूर्धाञ्जलिपुटः ।
> विभो साम्ब स्वामिन्परमशिव पाहीति निगद -
> न्विधातॄणां कल्पान्क्षणमिव विनेष्यामि सुखतः ॥

கயிலாயத்தில் பொன் மணி மண்டபத்தில், சிவகணங் களோடு வசித்துக்கொண்டு சம்புவின் சந்நிதியில், சென்னிமீது கைகூப்பி "எங்கும் நிறைந்த பரம் பொருளே, அம்பிகை பாகனே, சுவாமி பரமசிவமே யென்னைக் காப்பாற்று என்று முறையிட்டுக்கொண்டு பிரும்மாக்களின் கல்பங்களை க்ஷணமாக எப்பொழுதுதான் சுகமாக கழிப்பேனென்று சங்கரர் கூறுகின்றார்.

அப்பர் சுவாமிகளின் கயிலாய தரிசனம் பிரசித்தி வாய்ந் தது. தென் கயிலாயமெனக் கருதப்படும் "திருக்காளத்தியி னின்று புறப்பட்டு வடகயிலையை நோக்கிச் சென்றார். காசி

க்ஷேத்திரத்தை யடைந்தவுடன் தம்முடன் வந்தவர்களை அங்கே நிறுத்தித் தாம் மட்டும் மேலே சென்றார். இடைவிடாது நடந்தமையால் அங்கங்களெல்லாம் தேய்ந்தும், எலும்புகளெல்லாம் முறிந்தும்கூட கயிலைமலையானைக் காணும் பேரவாவினால் நகர்ந்து போய்க்கொண்டிருந்தார். அவ்வமயம் இறைவன் தோன்றி அருகிலுள்ளதொரு பொய்கையில் மூழ்கினால் கயிலை தரிசனம் கிடைக்குமென்றருள, அப்பர் சுவாமிகள் அவ்வாறே செய்தார். அப்பொய்கையில் மூழ்கி திருவையாற்றில் ஒரு வாவியில் எழுந்தார். அங்கே கயிலையைத் தரிசித்தார். எங்கும் சிவசக்தியைப் பார்த்தார். தாம் கண்ட காட்சியைப் பல திருப்பதிகங்களில் பாடியருளினார். அவைகளில் ஒரு பாடல் பின் வருமாறு :

"மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளோடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாம லையா றடைகின்றபோது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்."

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் கயிலாய யாத்திரையைப் பற்றிக் கேள்வியுற்றபொழுது இவையெல்லாம் என் ஞாபகத்திற்கு வந்தன.

இவ்விழா ஆவணிமூலத்தன்று அமைந்தது மற்றொரு விசேஷமெனக் கூறினேன். தருமபுர ஆதீனத்து ஆத்மார்த்த மூர்த்தியாய் விளங்கும் சொக்கலிங்கப் பெருமான் மதுரையம்பதியில் மாணிக்கவாசகருக்காக நரியைப் பரியாக்கியும், பிட்டுக்கு மண்சுமந்தும் திருவிளையாடல்புரிந்த நன்னாள் இது. இறைவனே குதிரையின் தலைவனாகத் தோன்றினார். மண் சுமக்கும் கூலியாளாகப் பாண்டியனிடம் மொத்துண்டார். இந் நிகழ்ச்சிகள் "சிவானந்தலஹரி"யிலுள்ள இரு சுலோகங்களை நினைவூட்டுகின்றன.

முதல் சுலோகத்தில் சங்கரர் மனதைக் குதிரைக்கு ஒப்பிடுகிறார்.

कल्याणिनं सरसचित्रगतिं सवेगं सर्वेङ्गितज्ञमनघं ध्रुवलक्षणाढ्यम् ।
चेतस्तुरङ्गमधिरुह्य चर स्मरारे नेतः समस्तजगतां वृषभाधिरूढ ॥

அழகுவாய்ந்ததும், சுலபமாகவும், நேர்த்தியாகவும், வேகமாயும் செல்லக்கூடியதும் எல்லா இங்கிதங்களையும் அறியும் சக்தி வாய்ந்ததும், குற்றமில்லாததும், குறிவைத்த இடத்திற்கு நேராகச்செல்லக்கூடியதுமான மனமென்னும் குதிரை மீதமர்ந்து போகக்கடவாய். காமனை யெரித்த பரமேசுவரனே, சகல உலகங்களுக்கும் தலைவனே, ரிஷப வாகனனே.

இரண்டாவது சுலோகத்தில் சில அடியார்கள் அபூர்வமான முறையில் ஈசனை வழிபட்டதைக் குறிப்பிட்டு நிந்தா ஸ்துதி செய்கிறார் சங்கரர்.

नतिभिर्नुतिभिस्त्वमीश पूजा विधिभिर्ध्यानसमाधिभिर्न तुष्टः ।
धनुषा मुसलेन चाश्मभिर्वा वद ते प्रीतिकरं तथा करोमि ॥

நமஸ்காரங்களினாலும், ஸ்தோத்திரங்களினாலும், பூஜா விதிகளாலும், தியான சமாதிகளாலும், நீ திருப்தி யடைவதில்லை. ஈசுவரனே வில்லினாலோ, தடியினாலோ, கற்களினாலோ, எவற்றால் உனக்குப் பிரீதி யுண்டாகுமென்பதைச் சொன்னால் அவ்வாறு செய்கிறேன்.

க்ஷேத்திராடனமும், நன்னாட்களும் ஈசுவர சிந்தனையில் நம்மை ஈடுபடுத்துவதற்காக ஏற்பட்டவை. செயற்கரிய கயிலை யாத்திரையைச் செய்துவந்து ஆவணிமூலத் திருநாளில் இன்னும் மேன்மேலும் ஈசுவர சிந்தனம் அபிவிருத்தி யடையவேண்டுமென்று ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆசீர்வதிப்பதுபோல அமைந்திருக்கின்றது இவ்விழா.

என்னுடைய கருத்து நான் வேதாந்த மாணவனென்பது, வேதாந்த வித்தகனென்னும் பட்டத்தை நீ வேதாந்த வித்தகன் ஆகவேண்டுமென்ற ஆசிப்பொருளில்தான் ஏற்றுக்கொள்கிறேன். நான் செய்துவரும் வேதாந்த சேவை பன்மடங்கு வளரவேண்டுமென்றும், அந்தச் சேவையே கடைத்தேறும் வழியாக அமையவேண்டுமென்றும் பரசிவத்தை யாசிக்கிறேன்.

சமயத்திற்கும், மக்களுக்கும் பலதுறைகளில் பணி செய்து வருகின்றது தருமையாதீனம். ஆதீனத்தின் சார்பில் நடத்தப் பட்டுவரும் பாடசாலைகளும், கல்வி நிலையங்களும், தலைசிறந்து

விளங்குகின்றன. கல்வியும், சமயமும் சேர்ந்து போதிக்கப்பட்டால்தான் நம் மாணவர்கள் சீரிய முறையில் தேர்ச்சி பெறுவார்கள். சைவ சமயத்தை அடிப்படையாகக்கொண்ட ஆதீனம், அதன் ஆதரவில் உள்ள பள்ளிகளில் இந்த உண்மையை நடைமுறையில் அநுஷ்டித்து வருகின்றது. சமயத்திற்கு அவசியமான சாஸ்திரங்களைப் பயின்றுவருகிறார்கள் ஆதீனத்து மாணவர்கள். ஈசுவர வழிபாட்டிற்கு வேண்டிய முறைகளிலும் பயிற்சி பெறுகிறார்கள். பல்கலைக் கல்லூரியில் மேல்படிப்பும் போதிக்கப்பட்டு வருகின்றது. ஆதீனம் புரிந்துவரும் இப் பெரிய தொண்டு மேன்மேலும் ஓங்கி வளர வேண்டும். இந்திய சமயங்களின் நுணுக்கங்களை ஆராயவும், தத்துவ சாஸ்திரங்களின் வளர்ச்சிக்காகவும் ஒரு நிலயத்தை யேற்படுத்த முயற்சிகள் நடந்துவருவதாக அறிகின்றேன். இம் முயற்சிகள் ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமான் அருளால் வெற்றிபெறவேண்டும். தருமையாதீனம் புரிந்துவரும் சேவை எங்கும் பரவி மக்களைச் சிவமயமாக்கிப் பேரானந்தத்தை யளிக்கவேண்டுமென்பது என் அவா. ஆவணிமூல விழாவாகிய இன்று ஆசிகூர்ந்து என்னைப் பெருமைப்படுத்திய ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களுக்கு என் அன்புகலந்த நன்றி. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் கயிலாய தரிசனம் நம்மை எல்லாம் புனிதமாக்கவேண்டும்.

"பயனேது ?"

திரு. டி. பி. சித்தலிங்கையா, புதுடில்லி.

இராகம் : காம்போதி] பல்லவி [தாளம் ; ரூபகம்

பயனேது பகர்வாயே பிறைசூடி எருதேறி (பய)

அநுபல்லவி

வினையேது விளைவேது எனவோதி நினதாள்கள்
இடைவிடாது நினையா மல்நினைந் ததிலோர் (பய)

சரணம்

துணையாகும் என நாடும் இணையாகும் உன்பாதம்
கணமேனும் என்பாலே கருணைகாட் டாதேகும். (பய)

தருமபுர ஆதீனம் தமிழிற்கும் : : சைவத்திற்கும் ஆற்றிவரும் பணி

திரு. அருள் தியாகராசா அவர்கள்
(இலங்கை வானொலியில் ஒலி பரப்பியது.)

சோழவள நாட்டின் சீருக்கும் சிறப்பிற்கும் காரணமாயிருப்பது காவிரி நதியாகும். சங்க காலத்திலிருந்தே இந்நதியின் சிறப்பைப் பல புலவர்கள் பாடிக்கொண்டே வருகின்றார்கள். வான் பொய்ப்பினும் தான் பொய்யாத பெருமையை உடையது இந்நதி. இதன் கரைகளின் இருமருங்கிலும் பல சிவாலயங்களும் மடங்களும் இருக்கின்றன. சிவபக்தியிற் சிறந்த சோழமன்னர்களே இவ்வாலயங்களை எடுப்பித்தார்கள்' சோழ நாட்டில் மலைகள் இல்லை. அப்படியிருந்தும் அங்கே கருங்கற்களால் ஆக்கப்பட்ட பல கோயில்களை நாம் காண்கிறோம். இதற்குச் சோழ மன்னர்களிடத்தில் குடிகொண்டிருந்த சிவபக்தியே காரணமாகும். இதனைப் பெயர் பெற்ற வரலாற்று நூலாசிரியராகிய கே: ஏ. நீலகண்ட சாத்திரி அவர்களும் வலியுறுத்தியுள்ளார்கள்.

இந்நாட்டில் திகழும் சைவ மடங்கள் எல்லாம், எப்பொருட்கும் இறைவனுகிய சிவனையும் சிவச் சின்னங்களையும் தமிழ் மறைகளையும், சைவ சித்தாந்த சாத்திரங்களையும் தம்மைவந்தடைந்தோருக்கு அறிவுறுத்தி வேதநெறி சைவநெறி பக்தி நெறி ஆகிய செந்நெறிகளை வளர்த்து வந்தன. இன்றும் வளர்த்து வருகின்றன. அவைகளுள் திருக்கைலாய பரம்பரைத் தருமபுர மடாலயமும் ஒன்று. இவ்வாதீனத்து ஆதி குரு மூர்த்தியாகிய குருஞான சம்பந்தர், திரு ஆலவாயில் எழுந்தருளியிருக்கும் சோமசுந்தரக் கடவுளின் திருவருளால் உதித்தவர். திருவாரூரில் உபதேச பரம்பரையில் தோன்றிய ஞானப்பிரகாசரிடம் உபதேசம் பெற்றவர். இவர் தமது குருநாதரின் ஆணைப்படி தருமபுரத்திற்கு வந்து, தம்மைவந்தடைந்த பக்குவிகளுக்கு ஞானேபதேசஞ் செய்து, சைவசமய ஸ்தாபனம் செய்து, மெய்கண்ட சந்தான தேசிக பீடாதிபதியாய்

எழுந்தருளியிருந்து, சிவபோகசாரம், முத்தி நிச்சயம், சோக்கநாத வெண்பா, முதலிய சாத்திரங்களையும், தோத்திரங்களையும் அருளிச்செய்தார். தம்மை ஆண்டருளிய சொக்கலிங்கப் பெருமானையே தஞ்சமெனக் கருதி அப்பெருமானை நாடோறும் நியமமாகப் பூசித்து வந்தார். இறுதியில் குருஞானசம்பந்தர், ஆனந்தபரவசரையடுத்துச் சச்சிதானந்தர் என்பவருக்கு அபிடேகஞ்செய்து, தமது பீடத்தமர்த்தி ஸ்ரீ சொக்கலிங்கத்தையும் கொடுத்தருளி, இத்திருமரபு நீடுழிதழைத்து வரும்படி நடாத்தி வரப்பணித்து அதன்பின் சமாதி கூடியருளினர். தருமபுரத்தில் நான்காவது பட்டத்தில் இருந்த மாசிலாமணி தேசிகர், திருச்செந்தூர் முருகன் திருவருளால் கலைஞானம் முழுதும் உணர்ந்த குமரகுருபரசுவாமிகளுக்குச் சிவஞானேபதேசம் செய்தவர், ஆருவது பட்டத்திலிருந்த திருஞானசம்பந்தரின் மாணுக்கர் வெள்ளியம்பலத் தம்பிரான். இவர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளுக்குப் போதகாசிரியராய் இருந்தவர். மேலும் இவர் சிவஞானசித்தியாருக்கு ஞானுவரண விளக்கமென்னும் ஓர் (செய்யுள்) விரிவுரையும், முத்தி நிச்சயம் என்னும் ஞான நூலுக்கு ஓர் பேருரையும் இயற்றியுள்ளார்.

இவ்வாதீனம் பல பெரும்புலவர்களை எல்லாம் ஆதரித்து வந்தது; வருகின்றது. வடுகநாத தேசிகர் என்பவர் இவர்களுள் ஒருவராகும். இவர் திருமுல்லைவாயிற் புராணத்தை இயற்றியுள்ளார். "குட்டித் தொல்காப்பியம்" என்னும் இலக்கண விளக்கத்தை இயற்றியவர் இவ்வாதீனப் புலவர்களில் ஒருவராகிய வைத்தியநாத தேசிகர். "இலக்கண விளக்கம்" என்ற நூலை அரிதின் முயன்று பதிப்பித்த பெருமை யாழ்ப்பாணம், ராவ்பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்களைச் சாரும். முத்தி நிச்சயப் பேருரை வெளிவருவதற்குப் பெருந் துணையாய் இருந்தவர் இலக்கண சுவாமிகள் என்ற முத்துக் குமாரசாமித் தம்பிரான் ஆவர். இவர் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக்கொண்டவர். வைத்தீஸ்வரன் கோயிலிலும், சிதம்பரத்திலும் இவருடன் கலந்து உரையாடும் பேறு எனக்குக் கிடைத்தது. (முத்து. சு. மா. அவர்கட்கும் அவர் ஆசிரியர்.)

தருமபுர ஆதீனம் தமிழை வளர்ப்பதையும், சமயப்பணி, புரிவதையும் தமது குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இவற்றை நிறைவேற்றப் பல்லாற்ருனும் முயற்சி செய்துவருகின்றது.

தேவாரப் பாடசாலை நிறுவியும், இடங்கள்தோறும் மகாநாடுகள் கூட்டியும், விஞ்ஞான மெய்ஞ்ஞான நூல்களை வெளியிட்டும், ஆதீனக் கோயில்களிதோறும் இன்னிசைத் தமிழ் வளர்த்தும் சமய மகாநாடுகள் (Congress of Religions) நடத்தியும், சமயாசிரியர்களது திருநாட்களை விழாவாகக் கொண்டாடியும், சித்தாந்த மகாநாடுகள் கூட்டியும். பலதிறப்பட்ட ஆக்க வேலைகளைச் செய்துவருகின்றது.

தருமபுர ஆதீனத்தின் இருபத்துநான்காவது பட்டத்தில் எழுந்தருளியிருந்து அருளாட்சி நடத்திய ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், திருக்கோயிற் பூசை முறைகள் சீர்பெற நடைபெறுவதற்கு வேதசிவாகம பாடசாலை ஒன்றையும், பக்தி நிலைபெறவும் திருமுறை ஓங்கவும் தேவாரப் பாடசாலை ஒன்றையும் 1941-ம் ஆண்டில் தொடக்கி வைத்தார்கள். மாணவர்களுக்கு உணவு, உடை, உறையுள், புத்தகம் முதலான யாவும் இலவசமாகவே அளிக்கப்படுகின்றன. பொதுவாகப் பெற்றோர்கள் பிள்ளைகளுக்குச் செய்யக்கூடிய ஆதரவுகள் அனைத்தும் செய்யப்படுகின்றன. ஐந்து ஆண்டுத் திட்டத்தில் கல்வி பயிற்றுவிக்கப்படுகின்றது.

தேவாரப் பாடசாலை மாணவர்களுக்குத் தேவாரமும், வேதசிவாகமப் பாடசாலை மாணவர்களுக்கு வேதமும், ஆகமமும், சிறப்புப் பாடமாகப் படிப்பிக்கப்படுவதோடு, பொதுவாக இசை, சமயம், இலக்கியம், இலக்கணம், ஆங்கிலம் கணிதம் முதலியனவும் வேண்டிய அளவு கற்பிக்கப்படுகின்றன. பாடத்திட்டங்கள் சிறந்த முறையில் அமைக்கப்பட்டிருக்கிறன. வேதசிவாகம பாடசாலையில் ஆறாண்டுத் திட்டத்தில் வேதம், சிவாகமம், காவியம், அலங்காரம், வியாகரணம் முதலிய பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. பாடங்களுக்குக் கால அட்டவணை உண்டு. இப்பாடசாலையில் ஆதி சைவ மாணவர்கள் மட்டுமே சேரத் தகுதியுடையவர்கள். தேர்ச்சிபெற்ற மாணவர்களுக்கு " ஆகமப்ரவீண " என்ற பட்டம் வழங்கப்படும்.

தற்பொழுது 25 ஆவது மகாசந்நிதானமாக வீற்றிருந்து அருளாட்சி செலுத்தும் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், கல்வி கேள்விகளில் மிக்க

வர்கள். நிர்வாகத் திறமைவாய்ந்தவர்கள். காலத்தோடோட்ட ஒழுகும் தீர்க்கதரிசன முடையவர்கள். ஓர் மடாதிபதிக்குரிய பண்புகள் எல்லாம் ஒருங்கமையப்பெற்றவர்கள். காசி, திருக்கேதாரம், அமரநாத், திருக்கைலாசம், முதலிய திருப்பதிகளில் வீற்றிருக்கும் சிவபெருமானைத் தரிசிக்கும் பெருந்தவ முடையவர்கள். இவர்களது அருளாட்சியில் இவ்வாதீனம் பல விதமான முன்னேற்றங்களை அடைந்துள்ளது. தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான சீர்காழி, வைத்தீஸ்வரன்கோயில், திருப்பனந்தாள், திருவையாறு. திருநள்ளாறு முதலிய தேவாலயங்களை இவர்கள் செவ்வனே பரிபாலித்து வருகின்றார்கள்.

“தென்னிந்தியாவிலுள்ள மதஸ்தாபனங்களில் தருமபுர ஆதீனம் மிகப் பெரியவற்றில் ஒன்றாகும். 27 கோவில்களை ஆதீனம் நிர்வகித்து வருகிறது. இது தவிர, பல கட்டளைகள் நடக்கின்றன. பல கோவில்கள் புதுப்பிக்கப்படுகின்றன. சமயப் பிரசாரத்தில் ஆதீனம் சிறப்பான சேவை செய்திருக்கிறது. தருமபுரத்தில் பெரியதோரு சமயநூற் புத்தகசாலை இருக்கிறது. சமய வகுப்புகள் நடத்தி ஆகமம், வேதம், தேவாரம் முதலியவற்றில் பயிற்சி அளித்திருக்கிறது. வருடாந்திர மகாநாடுகள் கூட்டி, தலைசிறந்த வித்துவான்களைக் கொண்டு பிரசங்கங்கள் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறது. இதர மதத்தவர்களும் தங்களது கருத்துக்களை வெளியிடவும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருக்கின்றது. ஆதீனத்தின் ஆதரவில் பல பள்ளிக்கூடங்கள் நடைபெறுகின்றன. வைத்தீஸ்வரன்கோயிலில் ஒரு அனாதை ஆசிரமும் நடந்து வருகின்றது. ஆதீனத்தின் ஆதரவில் சுமார் முந்நூறு புத்தகங்கள் பிரசுரமாயிருக்கின்றன” என்று சென்னை அரசாங்கத்தின் முன்னாள் மடாலய மந்திரி ஸ்ரீ கே. வேங்கடசாமி நாயுடு தருமபுர ஆதீனத்தின் சேவைகளைப் பாராட்டியுள்ளார். பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு தென்னிந்தியாவிலுள்ள சைவாலயங்களில் ஹரிசனங்கள் உள்ளே சென்று இறைவனை வணங்க முடியாத நிலையில் இருந்தனர். இதை ஓர் குறைபாடாகவே பிறசமயத்தவர்களும் கூடக் கருதினார்கள். 1939 ம் ஆண்டில் காங்கிரஸ் ஆட்சியில் சென்னைப் பிரதமமந்திரியாயிருந்த சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் மதுரை மீனாட்சியம்மன் கோயிலை ஹரிசனங்களுக்குத் திறந்துவிடுவதற்குச் சட்டம் இயற்றினார்.

இவரைப் பின்பற்றித் திருவாங்கூர் மகாராஜா அவர்கள், தம் ஆளுகைக்குட்பட்ட பத்மநாத சுவாமி கோயில் போன்ற பெரிய ஆலயங்களையெல்லாம் ஹரிசனங்கள் சென்று வணங்கும்படி திறந்துவிட்டார். இவர்களின் செய்கை தென்னாட்டிலுள்ள வைதீகர்களுக்கெல்லாம் மிக அதிர்ச்சியைக் கொடுத்தது. சென்னை அரசாங்கம் ஏனைய ஆலயங்களையும் ஹரிசனங்களுக்குத் திறந்துவிட வழிவகுத்தது. அதற்கு முன்பே ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தருமபுர ஆதீனத்திற்கு உட்பட்ட திருக்கோயில்களிலெல்லாம் ஹரிசனச் சகோதரர்கள் உள்ளே சென்று வணங்குவதற்கு ஏற்ற வசதிகளையெல்லாம் செய்து வைத்தார்கள். 1947 ம் ஆண்டில் தற்பொழுது அருளாட்சி செலுத்திவரும் குருமகாசந்நிதானம் அவர்களைச் சந்தித்து அவருடைய பொன்மொழிகளைக் கேட்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. சீர்காழி, வைத்தீஸ்வரன்கோயில், திருக்கடவூர் முதலிய க்ஷேத்திரங்களை யான் தரிசிக்கவேண்டுமென்று அவர்கள் விரும்பினார்கள். அதற்குரிய வசதிகளையெல்லாம் செய்துகொடுக்கும்படி அது சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு ஆணை தந்தார்கள்.

சென்னையிலுள்ள தருமபுர ஆதீன பிரசார நிலயம் திருவள்ளுவர் திருநாளை மாசி உத்திரத்தில் சிறந்த முறையில் பல்லாண்டுகளாகக் கொண்டாடுகின்றது. இந்த ஆண்டிலும் திருவள்ளுவர் திருநாளைப் பழுத்த தமிழ்ப் புலமை மிக்கவராகிய முன்னாள் இலங்கை அமைச்சர், சு. நடேசபிள்ளை பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் சென்னைமாநகரில் கொண்டாடியது. ஆறுமுகநாவலர் பெருமானைப் பின்பற்றி இலங்கையிலுள்ள பழைய ஸ்தாபனங்களாகிய, யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையும், கொழும்பு விவேகானந்த சபையும் இத்தினத்தைக் கொண்டாடிவருகின்றன. இலங்கை வானொலியும் உத்தியோக முறையில் இத் திருநாளை மாசி உத்திரத்தில் தான் கொண்டாடி வருகின்றது. இப்பொழுது சில கழகங்கள் இத் தினத்தை வெவ்வேறு நாட்களில் கொண்டாடிவருவதை நாம் காணலாம். திருக்குறளுக்கு ஓர் சிறந்த உரை வளத்தை மகா வித்துவான் ச. தண்டபாணி தேசிகரைக்கொண்டு இவ்வாதீனம் போற்றத் தக்க முறையில் வெளியிட்டுள்ளது. நீதிநெறி விளக்கம் என்ற நூலானது இவ்வாதீனத்தைச் சேர்ந்த குமரகுருபர முனிவரால் இயற்றப்பட்டது. இந்நூலைத் "திருக்குறள் பருவத்தில் ஈன்ற

பிள்ளை '' என்று வித்துவான் தியாகராசச் செட்டியார் அவர்கள் கூறுவார்கள். இந்நூலைத் தருமபுர ஆதீனம் பல்லோருக்கும் பயன்படும் வண்ணம் ஆங்கில மொழிபெயர்ப்புடன் வெளி யிட்டுள்ளது. '' ஞானசம்பந்தம் '' என்ற இவ்வாதீனத்தின் திங்கள் வெளியீடு பல அறிஞர்களின் கட்டுரைகளைத் தாங்கி வெளிவருவது.

தருமபுர ஆதீனம் சென்னையில் '' தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையம் ஒன்றை நிறுவியுள்ளது. இதனை 28—9—53 ல் சென்னை அரசாங்க முன்னாள் முதல் அமைச்சர் கனம் இராஜாஜி அவர்கள் திறந்துவைத்தார்கள். இப்பிரசார நிலையத்தில் திருமுறை வகுப்புகள், இசை வகுப்புகள் தமிழ் வித்துவான் வகுப்புகள், சைவசித்தாந்த வகுப்புகள், மகாநாடுகள் நடைபெற்றுவருகின்றன.

இந்நிலையத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழா 14—11—55 ல் சென்னையில் நடந்தது. இலங்கையில் ஆறு நாட்கள் சுற்றுப் பிரயாணஞ் செய்துவிட்டு இன்று நண்பகல் யாழ்ப்பாணத்திலிருந்து விமானமூலம் தாயகம் திரும்பிய பாரத நாட்டின் தவப்புதல்வராகிய இந்திய ஜனாதிபதி மாட்சிமை தங்கிய டாக்டர் இராசேந்திர பிரசாத் அவர்கள் இவ்விழா விற்குத் தலைமை தாங்கினார்கள்.

'' நம்முடைய முன்னோர்கள் மிக்க அறிவாளிகள். இத் தகைய நிலையங்களை அமைத்தார்கள். நம்முடைய பாரம்பரிய ஞானத்தையும் நமது சம்பிரதாயக் கலையையும் பாதுகாப்ப தற்காக மட்டுமல்ல, காலப் போக்கில் புது அனுபவங்களுக்கு ஏற்றபடி பயன்படுத்தவும் அந்நிலையங்களிடம் வசதிகளையும், சொத்துக்களையும் ஒப்படைத்தார்கள். தனது அடிப்படையான கொள்கையை விட்டுவிடாமல் பற்றிக்கொண்டிருக்கிற சமூகம் ஒன்று, உலகத்தில் இருக்கிறதென்றால் அது இந்திய சமூகம் தான். இந்தியாவிலுள்ள நாம் பெற்றுள்ள பெரிய பரம்பரைச் சொத்து சமயப் பண்பு '' என்று தமது பொருள் பொதிந்த தலைமையுரையில் ஜனாதிபதி அவர்கள் கூறினார்கள். ஆறு ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பெற்ற இந்நிலையம் மேன் மேலும் வளர்ந்து வருவது மகிழ்ச்சிக்குரியதாகும். தருமபுர ஆதீனம் பல்வேறு துறையில் செய்துவரும் சமயப்பணிகள் என்றும் ஓங்கி வளர்க.

குருமகாசந்நிதானம் அவர்கள் தென்னாட்டில் மாத்திரம் சைவசமயத்தையும் தமிழையும் விருத்தி செய்வதுடன் அமையாது, சிவபூமி என்று திருமூலரால் பாடப்பெற்ற ஈழநாட்டிலும் அவற்றைப் பரப்பத் திருவுளங்கொள்ளுதல்வேண்டும். ஞானசம்பந்தப்பெருமானாலும் சுந்தரமூர்த்தி சுவாமிகளாலும் புகழப்பட்ட திருக்கேதீஸ்வர க்ஷேத்திரத்தில் ஓர் அர்ச்சகர் கலாசாலை நடத்துவதற்கு அஸ்திவாரக்கல் நாட்டப்பட்டிருக்கின்றது. இத்தலத்தில் தருமபுர ஆதீனத்தின் மடாலயம் ஒன்று அமைந்தால், இலங்கைக்கும் தருமபுர ஆதீனத்திற்கும் உள்ள தொடர்பு மேலும் வலியுறும்.

தருமபுர ஆதீனத்தின் தமிழ்ப்பணியும் சைவப்பணியும் வாழ்க !

சிரவணம்

மும்மையுள் முதலாங் கேள்வி மூவிரு குறியுங் கொண்டே
எம்மறை முடிவு மாகி யிலங்குப நிடதங் கட்கும்
செம்மையுள் ளுயிர்க்க ணேயே செலுங்கருத் தென்னும் புத்தி
நம்மையாள் பரமாநந்த நாமக ளுடையார் நூலே

இது சிரவணம் (கேள்வி) என்பதன் விளக்கம் உணர்த்துவதாய் ஸ்ரீ பரமாநந்தசரசுவதி சுவாமிகள் இயற்றியருளிய 'ஸ்ரீசுருதிசட்லிங்கசங்கிரகம்' என்னும் நூலின் பத்தாவது சுலோகத்தின் கருத்தை அறிவிக்கும் பாடல்.

தாற்பரியத்தை நிருணயம்புரியும் ஆறுகுறியுருவி னுத்திகளால் சருவ வேதாந்தங்களாகிய உபநிடதங்களுக்கும் முதலிடைகடைகளால் சிவருபாத்துமாவிலேயே தாற்பரியமாம் என்னும் புத்தி (நிச்சயம்) சிரவணம் ஆம். (இது சிரவணத்தின் இலக்கணமாக உணர்வு நூல்கள் உரைக்குமாறு).

वेदान्तानामशेषाणामादिमध्यावसानतः ।
ब्रह्मात्मन्येव तात्पर्यमिति धीः श्रवणं भवेत् ॥

ஆறுகுறிகள் :— 1. உபக்ரமம் உபசம்ஹாரம் இரண்டினொருமை. 2. அப்பியாசம். 3. அபூர்வதை. 4. பலம். 5. அர்த்தவாதம். 6. உபபத்தி. இவை ஒவ்வொன்றும் தாற்பரியத்தின் நிருணயத்திற் குறியாகும். —முத்து. சு. மா.

சேக்கிழார் கண்ட கண்ணப்பர்

திரு. வ. குகசர்மா அவர்கள்
தெல்லிப்பழை, சிலோன்

தோற்றுவாய் :

மக்களின் மனதை கல்லுக்கு உவமையாக்குவர் கற்றறிந்தோர். கல்லிலே நீர் ஊற்றிற்கு இடமுண்டு, கல்லினுள்ளே தேரை அந்த நீரை உண்டே வளர்ந்தது என்பதை "கருப்பையில் முட்டைக்கும் கல்லினுள் தேரைக்கும்" என்ற முதலையுடைய வெண்பாவினால் யாம் அறிகிறோம். கல்லும் கனிந்து அன்பாகிய நீரூற்றாகமாறுவதற்குப் பல வழிகளை சைவ மக்கள் கூறியிருக்கிறார்கள். அருணகிரியார் தாம் பாட வந்த கந்தரனுபூதி என்னும் நூலின் காப்பிலே

"நெஞ்சக்கன கல்லும் நெகிழ்ந்துருகத்
தஞ்சத்தருள் சண்முக னுக்கியல்சேர்
செஞ்சொற்புனை மாலை சிறந்திடவே"

என்று கூறியிருக்கிறார். மணிவாசகர் "தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக் கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன் கருணை வெள்ளத்தழுத்தி" என்று கூறியிருக்கிறார்,

கல்லை ஒத்த இதயம் கொண்டவரை மாத்திரமன்றி இரும்பை ஒத்த இதயம் கொண்டவர்களுமுண்டு. கல்லில் உள்ளதுமாதிரி இரும்பினுள்ளே ஒரு சீவராசியோ அல்லது நீரூற்றோ இருக்கமுடியாது. இரும்பை இதயத்திற்கு உவமானமாக மணிவாசகர் திருவாசகத்தில் "இருப்பு நெஞ்சவஞ்சனேனை ஆண்டுகொண்டு" என்று கூறியிருக்கிறார். இரக்கம், அறிவு, பண்பாடு, முதலிய நீரூற்றுக்கள் ஒன்றும் அற்று இருக்கும் இதயத்திற்கு இரும்பை உவமையாகக் கூறுதல் சிறந்ததாகும். கண்ணப்ப நாயனார் உதித்த வேடுவ குலத்தைப் பற்றிச் சேக்கிழார் "மைச்சேறிந்தனையமேனி, வன்றோழின் மறவர் தம்பாலச்சமு மருளுமொன்று மடைவிலாருடைவன்றோலார் போச்சையினறவு முனின் புழுக்கலு முணவுகொள்ளு நச்சழற் பகழிவேடர்' என்று கூறியிருக்கிறார். கண்ணப்பரின் தந்தையாரான நாகன் என்பவன் ஆண் சிங்கம் போன்றவன்.

கொடுமையே தலை நின்றவன் என வர்ணிக்கப்பட்டுள்ளான். தத்தை என்னும் அன்னை பெண் சிங்கம் போன்றவள் என வர்ணிக்கப்பட்டுள்ளாள். இவ்வாருக அன்பேன்பதே என்ன வேன்று அறியாத வேடர் குலத்திலே பிறந்து அவர்களிடையே வளர்ந்த கண்ணப்பர் ஒருநாள் தன் குல வழக்கப்படி வேட்டை யாடச்சென்ருர் " முன்பு செய்தவத்தின் ஈட்டம் வந்து சார்ந்தமை யினுலே இறைவன் கண்ணப்பரை ஆட்கொள்ள நினைத்தார். இரும்பு மனத்தை யுடையவர்களை ஆட்கொள்ளும் திறத்தை நாம் இங்கே காணலாம். இரும்பைத் தம் வசமாக்கத்தக்கது காந்தம். அது இரும்பு முழுவதையும் தம் வசமாக்கித்தான் நினைத்த இடத்திற்குக்கொண்டு செல்லவல்லது. ஒரு இரும்புத் துண்டினுள் காந்தம் புகுந்தால் அது தன் செயலற்றுவிடும். இவ்வாறே இரும்பு மனத்தவர்களை இறைவன் ஆட்கொள்ளும் திறத்தை

" இரும்பைக் காந்தம் வலித்தாற் போலியைந்தங்குயிரை
யேரியிரும்பைச் செய்வதுபோ லிவனைத்தாணுக்கி "

என்று சிவஞானசித்தியார் எடுத்துக் கூறும்.

வேட்டையாடச்சென்ற திண்ணனுர் தண்ணீர் விடாய் கொண்டு தோழனுகிய நாகனுடன் பொன்முகலியாற்றில் நீர் குடிக்கச்சென்ருர். அப்பொழுது திருக்காளத்தி மலையைக் கண்டார். தனது தோழனை நோக்கி அது என்னமலை யென்று கேட்டார். நாகன் அது திருக்காளத்தி மலை அந்த மலையில் கண்ணுக்கினிய காணத் தகுந்த இயற்கைக் காட்சிகள் உண்டு. அங்கே குடுமித்தேவர் இருக்கிருர் கும்பிடலாம் என்று கூறினுன். திண்ணனுரின் இரும்புள்ளத்திலே காந்தம் வேலை செய்யத் தொடங்கிவிட்டது. அதைப் பின்வரும் பாடல் மூலம் சேக்கிழார் உணரவைக்கிருர். திண்ணனுர் தனது தோழ னுக்குச் சொல்லுகிருர்

" ஆவதே னிதனைக் கண்டிங் கணைதோறு மென்மேற்பாரம்
போவதொன் றுளது போலும் ஆசையும் பொங்கி மென்மேல்
மேவிய நெஞ்சும் வேருேர் விருப்புற விரையா நிற்கும்
தேவரங் கிருப்ப தெங்கே போகென்ருர் திண்ணனுர் தாம் "

திண்ணனுர் உள்ளம் மாறும் நிலையை இரும்புகாந்தத்தில் வசப்படும் நிலையை நாம் இதில் பார்க்கிருேம்.

அன்பு நிலை :

காந்தத்தினுல் இழுக்கப்பட்டுச் சென்ற இரும்பு அருள் என்று சொல்லப்பட்ட அக்கினியில் விழுகின்றது. விழுந்த இரும்பு அக்கினி வடிவமாய் விடுகிறது. சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற திருக்கைலாய மலையை அடைந்தவர்கள் தங்களது இயற்கை யழகு கெட்டு அதன் மெய்யொளியில் அடங்கி விடுகின்றனர். அதுபோலத்தான் சிவபெருமானை அடைந்தவர்கள் தமது இயற்கை திரிந்து அன்புருவமாய் விடுவார்கள்.

திருக்காளத்திமலையிலேயேறிய திண்ணனுர் இறைவனின் திருவுருவைக்கண்டார். அவரது பாவத்தின் முன்னைச் சார்பு விட்டகன்றது, '' அன்பின் வேகமானது மேற்செல்ல மிக்கதோர் விரைவினேடும் மோகமாயோடிச் சென்ருர்; தழுவினுர்; உச்சி மோந்தார் '' என்று சேக்கிழார் சொல்லுகிருர். '' அன்பும் சிவமும் இரண்டேன்பரறிவிலார் '' என்பது திருமூலர் வாக்கு. இந்தக் காட்டிலோ குடுமித்தேவர் தனியே யிருக்கிருர். அவருக்கு யார் துணை என அவர் மனம் அலைபாய்ந்தது; துட்டமிருகங்கள் அவருக்குத் துன்பம் செய்யுமே ? அவருக்குப் பசிக்குமே ? யார் இறைச்சியும் சோறும் படைப்பார்கள்? இவ்விதமாகவோடியது அவரின் சிந்தனை. திண்ணனுருக்கு தனக்குப் பசிக்கின்றது தனக்கு நீர் தேவைப்படுகின்றது என்கின்ற நிலைமைகளொன்றும் இப்போது இல்லை. இறைச்சி தேவையாயிருந்தது ஏன் ? இறைவனின் பசியைப் போக்க. நீர் தேவையாயிருந்தது இறைவனை மஞ்சனமாட்ட. வில் தேவையாயிருந்தது இறைவனைப் பயங்கர மிருகங்களினின்றும் பாதுகாக்க. இவ்வாறு யான் எனது என்ற தன்மைகளெல்லாவற்றையும் திண்ணனுர் மறந்துவிட்டார். எனவே திண்ணனுரின் செய்கைகளெல்லாம் இறை செய்கைகளாய்விட்டன.

'' எனுதியானெனுஞ் செருக்கிகந்து தன்னுணர்ந்துளார்
மனுதி கொண்ட செய்கை தாங்கி மரபின் முத்தீ வழிதரும் ''

ஈசனல்லவா ? எங்களிறைவன்

இறைவனுக்காக உணவு, மலர், நீர் முதலியன தேடப் புறப்பட்டார் திண்ணனுர். காட்டிலே மலர்களைப் பறித்துத் தம்

தலையில் சூட்டிக்கொண்டார். முன்னே தம் துணைவராலும் தம்மாலும் கொல்லப்பட்ட பன்றியின் இறைச்சியைச் சுவை பார்த்துச் சுவையுள்ளவற்றை எடுத்துக்கொண்டார். நீர் எடுக்கப் பாத்திரமில்லை. பாத்திரமிருந்தாலும் கைகள் இல்லை ஒரு கை இறைவனின் பாதுகாப்புக்காக வில்லையும் அம்பையும் ஏந்தியிருக்கிறது. மறு கையில் இறைவனுக்காம் உணவு இருக்கிறது. எனவே வாயில் நீரை மொண்டுகொண்டார் இறைவன் இளைத்துவிடப்போகிருரே யன்று விரைவாகப்போய் முன்பே வேதியர் இட்டமலர்களை செருப்பால் மாற்றி வாயில் “ மஞ்சன நீர் தன்னை - விளைத்தவன் புமிழ்வார்போல விமலனுர் முடிமேல் விட்டார் ” திண்ணனுர் வாயிலிருந்தும் உமிழ்ந்த நீர் புனித மஞ்சன நீர் என சேக்கிழார் கூறுகிருர். தொண்டர் சீர்பரவும் சேக்கிழார் மாத்திரமல்ல வேறு புலவரும் மஞ்சன நீர் எனக் கண்ணப்பர் வாய்கொண்ட புனித நீரைக் கூறியுள்ளார். நீர் நிறைந்த கருமுகில்கள் நந்தி மலையை நோக்கி மழை பெய்ய வருகின்றன. அவை வானவில்லை தம்முள் கொண்டிருக்கின்றன. வந்து நந்திமலையைச் சூழ்ந்து மழையைப் பெய்கின்றன. இக்காட்சியைப் பார்த்த புலவருக்குத் திண்ணனுரின் திவ்விய சரித்திரம் நினைப்புக்கு வருகிறது. அவரின் நினைப்பு பின்வரும் பாடலாக வெளிவருகிறது.

“ பூட்டுகார் முகந் தன்னெடுங் தோன்றிய புயல்வா
யூட்டுதண் புனனந்தியங் கிரிமிசையுகுத்தல்
வேட்டுவக் குலத்திண்ணனுர் மஞ்சனம் விமலற்
காட்டுகின்றதோர் தனிச்செயல் போன்றுளதன்றே ”

என்பது கச்சியப்பர்வாக்கு.

அன்பின் முதிர்ச்சி :

திண்ணனுர் திருக்காளத்தி மலையில் இறைவனுரைக் கண்ட நாள் தொடக்கம் பசி, நித்திரை, என்பன இவரை வந்து அணுகவில்லை. தந்தையாகிய நாகன் முதலியோர் அவருடன் வந்து பேசிச்சென்றதையும் அவர் உணரவில்லை. இவரது “ ஆவியோடாக்கை ஆனந்தமாய்க் கசிந்துருக ” இறைவன் பணியிலே நின்ருர். ஆரும் நாள் திண்ணரது அன்பை சிவகோசரியார் என்னும் அந்தணருக்குக் காட்டவும் தன் மேல் வைத்த பேரன்பை விளக்கவும் தமது ஒரு திருக் கண்ணீரில் உதிரம் பாயச்செய்தார் வழமைபோல் உணவு,

மஞ்சனம், மலர் என்பன கோணர்ந்தார் கண்ணப்பர். உதிரத்தைக் கண்டவுடன் மயங்கி வீழ்ந்தார். பின்பு எழுந்து யார் இதைச் செய்தாரோ அவரைத் தண்டிக்கவேண்டுமென நினைத்து நாற்புறமும் தேடினர், ஆத்திர மடங்கியவுடன் மருந்துகளைத் தேடிக் கண்ணில் இட்டார். ஆனல் உதிரம் நிற்கவில்லை. ஊனுக்கு ஊன் என்னும் உண்மை கண்டார். “அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு” என்பது வள்ளுவர் வாக்கு. கண்ணப்பர் தன் கண்ணைக் கணையாலகழ்ந்து எடுத்து இறைவன் கண்ணிலப்பினர். இரத்தம் நின்றது, இதைக்கண்ட திண்ணனர் ஆனந்தத்தால் பாய்ந்தார் தோள் கொட்டினர், கூத்தாடினர். “நன்று நான் செய்த விந்தமதியென நகையுந் தோன்ற யோன்றிய களிப்பினுலே யுன்மத்தர் போலமிக்கார்”

மறுகண்ணிலே உதிரம் பெருகத் தொடங்கியது. அடையாள மாக இறைவன் திருக்கண்ணில் இடது காலை யூன்றி பகழி கொண்டு மறு கண்ணிலூன்றலும் இறைவனுக்குப் பொறுக்க வில்லை “நில்லு கண்ணப்ப” எனத் தடுத்தார். இவ்வாறு கண்ணப்பர் தம் அன்பில் விளைந்த ஆரமுதமாகிய இறைவ னுடன் கலந்து இன்புறுவராயினர்.

“கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை கண்டபின்
என்னப்ப னென்னொப்பிலென்னையு மாட்கொண்டருளி”

எனக் கண்ணப்பரின் அன்பை மணிவாசகர் போற்றுகிறர்.

அன்புக்கு வசப்படுவான் இறைவன் என்பதைச் சேக்கிழார் காட்டியபடி கண்டு யாமும் பிரதிபலன் கருதா அன்பை இறைவன் மாட்டுச் செலுத்த முற்படுவோமாக.

பன்னெறி விளக்கம்

பெருநாவலர், களமூர், திரு. செ. செல்வப்ப முதலியார் பாடியது.

பூசையைக் காட்டுவர் காரிய தேசிகர் பொங்குபறை
யோசையைக் காட்டுவ ரன்றிற் பிடிப்பவ ரோர்முறுக்கு
மீசையைக் காட்டுவர் வீரம்படிப்பவர் மேருவைநே
ராசையைக் காட்டுவர் மோசம்பின் செய்பவ ராரணங்கே.

செய்விக்கப்பட்டது. அவ்வமயம் திருவதிகை மனவாசகங் கடந் தார் தமிழ்மறைப்பள்ளிச் சிறுவர் சிறுமியர்களால் திருமுறைகள் ஓதப்பெற்றன. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அருளால் பாலபிஷேகமும், ''சாந்தமோடு சந்தனத்தின் அளறு தங்கி அழுந்திய செந்திருவுரு'' என வாகீசர் போற்றுமாறு போல் விளங்கிய சந்தனக் குழம்பின் அபிஷேகமும் அங்குக் கூடியிருந்தார் மனம் கசிந்துருகச் செய்தன.

அதன்பின், கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களின் அருளாட்சி நாளும் ஓங்கவும், அறப்பணிகள் யாவும் நன்கு வளரவும், நீடுழிகாலம் நலம் பெருகவும் திருவீரட்டநாதப் பெருமானுக்கும், திரிபுரசுந்தரியாகிய பெரியநாயகி அம்மை யாருக்கும்.

' ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமிலாற் காயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ ''

என்ற மணிவாசகப்பெருமான் திருவாக்கின்படி ஆயிரம் நாமங்கள் சொல்லி அர்ச்சனை வழிபாடுகள் நடைபெற்றன.

அப்பொழுது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் திருவுளப்பாங்கின்படி வெளியிடப்பெற்ற நான்காந்திருமுறையும்; திருநாள்மங்கல விழா வெளியீடான திருவதிகை திருவீரட் டானத் திருப்பதிகங்களும், அன்பே அமையும் அதிகைக் கெடில வீரட்டானத்துறை அம்மானின் திருவடிகளிலும், தாயினுமினிய நல்லாளாகிய உமையாளது திருவடித் தாமரையிலும், செஞ் சொற்றுறைச் சாத்தும் தாண்டக வேந்தரின் இணையடிகளிலும் வைத்து வழிபாடு செய்யப்பட்டன.

இவ் வழிபாட்டில் திருவாவடுதுறை ஆதீனம், திருவதிகை திருநாவுக்கரசு சுவாமிகள் மடத்தின் கட்டளை விசாரணை தவத் திரு. குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் சைவத்திரு. ரா. சண்முகசுந்தரஞ் செட்டியார், ஆலயத்தின் தருமகர்த்தரான ப. வே. சுப்பிரமணியச் செட்டியார் அருள்நெறிக் கழகத்தின் உறுப்பினர்கள் மனவாசகங்கடந்தார் தமிழ்மறைப் பள்ளிச் சிறுவர் சிறுமியர்கள் மற்றும் லக்ஷார்ச்சனை புரிந்துவரும் பல அன்பர்கள் கலந்துகொண்டனர்.

வழிபாட்டின் நிறைவில் திரிபுரசம்ஹாரமூர்த்தியின் சந்நிதியில் விழாமலரான திருவதிகைத் திருப்பதிகங்கள் அன்பர்கட்கு வழங்கப்பெற்றன. தருமையாதீனப் புலவர், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் "தருமையாதீனம் குருமகாசந்நிதானம் அவர்கள் இதுபோன்ற வழிபாட்டின்போது அத்தலத்தின் திருப்பதிகங்களை அச்சிட்டுவழங்கிவருகின்றார்கள். அவர்கள் சைவ உலகத்திற்குச் செய்துவரும் அறப்பணிகள் மிகப்பல என்ற பல கருத்துக்களைக் கூறி ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் திருவீரட்டநாதரின் திருவருளால் நீடூழி காலம் நலம்பெறத் திகழவேண்டுமாறு நாம் யாவருங் கூடித் திருப்பதிகங்களைப் பாராயணம் செய்வோமாக" என்று முன் மொழிந்தார்கள்.

பின் ஆதீன ஓதுவாமூர்த்தி அவர்கள் திருப்பதிகங்களைப் பாராயணஞ் செய்ய, அதைத் தொடர்ந்து அங்குக் குழுமியுள்ள எல்லா அன்பர்களும் பாராயணம் செய்தனர்.

அவ்வாறு பாராயணம் செய்து கொண்டிருந்த காலத்து

"உரைசெய் நூல்வழி யொண்மலர் எட்டிடத்
திரைகள் போல்வரு வல்வினை தீர்ப்பரால்
வரைகள் வந்திழி யுங்கெடி லக்கரை
விரைகள் சூழ்ந்தழ காயவீ ரட்டரே"

என்ற திருப்பதிகத்தின் முன் ஈரடிகளை ஓதும்போது வீரட்டநாதர் அமர்ந்திருக்கின்ற கருவீட்டிலிருந்து மணியோசை கேட்டது. பின் தொடர்ந்து பாராயணஞ்செய்து கொண்டுவந்தபொழுது "போற்றித் திருத்தாண்டகம்" ஓதும்போது இறைவர்க்கு உச்சிக் கால வழிபாடும், இப்பதியின்கண் புரட்டாசித்திங்கள் முதல் செய்து வரும் இலக்ஷார்ச்சனை வழிபாடும் மங்கல ஒலிகளோடு நடைபெற்றன. இதுவன்றி இப்பாராயணத்தின்போது இடையிடையே பெரியநாயகி அம்மையின் கொடிமரத்தின் மணியோசையும் நற்சகுனத்தின் அறிகுறியாகச் செவியுற்றது.

பாராயணத்தின் முடிவில், திருவதிகை அருள் நெறிக் கழகத்தின் செயலாளனாகிய அடியேன் "பாராயணத்தின்போது நடந்த மேற்கண்ட திருவருள் நிகழ்ச்சிக் குறிப்பினை உணர்த்தி, நமது திருவீரட்டானப் பெருமானின் திருவருள் திறத்தால்

குருமகாசந்நிதானம் அவர்கள் நீடுழிகாலம் வாழ்ந்தருள வேண்டும் என்று கூறி, தலப் பதிகங்களையும், வரலாற்றினையும், கல்வெட்டுக் குறிப்பினையும் அச்சிட்டு வழங்கியமைக்கு அருள் நெறிக் கழகத்தின் சார்பிலும், ஆலய நிர்வாகஸ்தர்களின் சார்பிலும், வழிபாட்டில் கலந்துகொண்ட அன்பர்கள் சார்பிலும் கயிலை குருமகாசந்நிதானத்தின் திருவடிகட்கு என்றும் மறவா நன்றியைச் செலுத்தியதோடு அவர்களது அருளாணையைச் சிரமேற்கொண்டு இவண் வந்து வழிபாட்டினைச் செய்வித்த திருவாளர். வித்துவான், முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கட்கும் ஆதீன ஓதுவாமூர்த்திகள் அவர்கட்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டேன். வாழ்த்துப் பாடலுக்குப்பின் எல்லோருக்கும் திருவருட் பிரசாதம் வழங்கப்பட்டது.

வாழ்க தருமையாதீனம். வளர்க சமயநெறி.

திருச்செந்தூரில்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களின் கந்த சஷ்டி விரதம். முருகன் அல்லன நீக்கி நல்லவை காக்கும் பெருமான், அவுணரின் வேரறுத்து அமரர்களைத் தஞ்சமளித்துக் காத்தபெருமான். சூரன் என்னும் அவுணனை அழித்த திருநாள் கந்த சஷ்டித் திருநாள். கந்த சஷ்டித் திருநாளில் அழகுக்கும் ஆற்றலுக்கும் இருப்பிடமாய சேவ்வேளின் சேவடி தொழுதல் சிறப்புடையது. தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் கயிலை ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் கந்தர் சஷ்டித் திருநாளில் ஆண்டு தோறும் இருந்துவருவதுபோல் இவ்வாண்டும் சேந்தில்நகருக்கு 31—10—59 சனிக்கிழமை யன்று காலையில் எழுந்தருளி உண்ணுநோன்பு மேற்கொண்டுள்ளார்கள். கந்தர் சஷ்டித் திருநாட்களாகிய ஆறுநாளும் உண்ணுநோன்பு மேற்கொண்டு, அறம் காத்துச் சேந்தில் வேலனை - சேவற்கொடியோனை வழிபட்டருளினார்கள். கந்தசட்டித் திருநாளன்று மாகேசுவர பூசை செய்வித்துப் பாரணை முடித்தருளினார்கள்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் கயிலை ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருக்கயிலாய

தரிசனம் செய்து எழுந்தருளியதைக் குறித்து திருச்சேந்தூரில் 4—11—59 அன்று ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம் தர்மகர்த்தாக்களும், சைவ வேளாளர் ஐக்கிய சங்கத்தார்களும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தைப் பாராட்டி வரவேற்புரைகள் வாசித்தளித்தார்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் ஆசியருளினார்கள்.

தேவஸ்தானங்களில் கந்த சஷ்டித் திருநாள்

வேளூரில்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான வைத்தீஸ்வரன்கோவில் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம், ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிக்கு கந்தசஷ்டி விழா 31—10—59 சனிக்கிழமை முதல் தொடங்கி 9—11—59 திங்கட்கிழமை முடிய உள்ள நாட்களில் மிக்க சிறப்போடு நடைபெற்றது. விழா நாட்களில் ஷண்முகார்ச்சனுருபமான லக்ஷார்ச்சனைகளும், சொற்பொழிவுகளும் கதாகாலக்ஷேபமும் நடைபெற்றன.

மாயூரம் - குமரக்கட்டளையில்

ஸ்ரீகௌரீ மாயூரம் மாயூரநாதசுவாமிகோயில், திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான குமரக்கட்டளை ஸ்ரீ வல்லீ தேவசேனு சமேத ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தில் கந்த சஷ்டி விழா 31—10—59 சனிக்கிழமை முதல் தொடங்கி 6—11—59 வெள்ளிக்கிழமை முடிய உள்ள நாட்களில் மிக்க சிறப்போடு நடைபெற்றது. விழா நாட்களில் நாள்தோறும் சொற்பொழிவுகளும் கதாகாலக்ஷேபமும் மாலை 6-மணிக்குத் தொடங்கி நடைபெற்றன.

ஆதீன தேவஸ்தானங்களில் கலைமகள் விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான தேவஸ்தானங்களில் நவராத்திரி நாட்களில் ஸ்ரீ அம்பாளுக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடைபெற்றன.

சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானம், வேளூர் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானம், குத்தாலம் ஸ்ரீ உக்த வேதீசுவர சுவாமி தேவஸ்தானம், திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி தேவஸ்தானம், திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி தேவஸ்தானம், திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவர சுவாமி தேவஸ்தானம், திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி தேவஸ்தானம், பேரளம் ஸ்ரீ சுயம்புநாத சுவாமி தேவஸ்தானம். திருக்குவளை ஸ்ரீ தியாகராஜ சுவாமி தேவஸ்தானம் ஆகிய இடங் களில் நவராத்தி நாட்களில் அறிஞர்கள் பலர் சமயச் சொற் பொழிவுகள் செய்தனர். அன்பர்கள்கேட்டு உய்ந்தனர்.

ஆதீனக்கல்வி நிலையங்களின் கலைமகள் விழா

தருமை ஆதீனம் மடாலய முகப்பில் உள்ள திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் 3—10—59 முதல் 10—10—59 முடிய உள்ள நாட்களில் ஆதீனக் கல்வி நிலையங்களின் கலைமகள் விழாச் சொற்பொழிவுகளும் இரவு நாடகங்களும் நடைபெற்றன. 7—10—59 புதன்கிழமை இரவு 7 மணிக்கு "ஏழிசைவல்லபி" திருமதி K. B. சுந்தராம்பாள் M. L. C. அவர்கள் குழுவினரின் இன்னிசை விருந்து நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருளால் திருமதி K. B. சுந்தராம்பாள் அவர்களுக்கு மாயூரம் சப் ஜட்ஸ் ஸ்ரீமான் ஹரிஹர ஐயர் B. A., B. L., அவர்களால் பாராட்டுரையுடன் பொன்னாடையும் அவர்கள் குழுவினருக்குப்பட்டாடைகளும் போர்த்தப் பட்டன. முதுபெரும் புலவர், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள், திருமதி. K. B. சுந்தராம்பாள் M. L. C., அவர்களின் இன்னிசையைப் பாராட்டிப் பேசினார்கள்.

குத்தாலம் தேவஸ்தான சாகுபடியாளர் கூட்டுறவு சங்கத் தொடக்க விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்த மான குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீஸ்வரசுவாமி தேவஸ்தானத்து நிலங்களைச் சாகுபடி செய்து வரும் சாகுபடியாளர் கூட்டுறவு சங்கத்தை சென்னை மாநில அறநிலைய விவசாய அமைச்சர் நல்லறங்காவலர், கனம், திரு. M. பக்தவத்சலம் B. A., B. L., அவர்கள் 23—10—59 அன்று தொடங்கி வைத்தார்கள்.

கனம் அமைச்சர் அவர்களைப் பூரணகும்ப மரியாதையுடன் வரவேற்று ஆலயத்திற்குள் அழைத்துச் சென்று சுவாமி தரிசனம் செய்து வைத்தனர்.

அதன்பிறகு ஆஸ்தான மண்டபத்தில் கனம் அமைச்சர் அவர்கள் தலைமையில் கடவுள் வணக்கத்துடன் கூட்டுறவு சாகுபடியாளர் சங்கத் தோடக்கவிழா நிகழ்ந்தது. வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தேவஸ் தானச் சார்பில் வரவேற்புரை வாசித்தளித்தார்கள்.

குத்தாலம் தேவஸ்தான காரியாலயக் கட்டிடத் திறப்பு விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்த மான குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் நீண்ட நாளாகத் தேவையாயிருந்த தேவஸ்தானக் காரியாலயக் கட்டிடம் புதிதாகக்கட்டப்பெற்றுள்ளது. 3—10—59 மாலை சென்னை மாநில அறநிலைய அமைச்சர் நல்லறங்காவலர் கனம், திரு. M. பக்தவத்சலம் B. A., B. L., அவர்கள் தேவஸ்தானக் காரியாலயக் கட்டிடத்தைத் திறந்து வைத்தார்கள். வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தேவஸ்தானச் சார்பில் வரவேற்புரை யொன்று வாசித்தளித்து நன்றியுரை முதலியன கூறி விழாவை உடனிருந்து நிகழ்த்தினார்கள்.

சென்னை, சமயப் பிரசார நிலையத்தில்

மாதாந்தர சமயப் பிரசார வழிபாட்டுக் கூட்டம்

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தின் (வேளூர் தேவஸ்தான இறைபணி மன்றம்) சார்பில் நடைபெறும் மாதாந்தர சமயப் பிரசார வழிபாட்டுக் கூட்டம் 1—11—59 காலை திருவொற்றியூர்த் தியாகேசப் பெருமான் திருக்கோயிலில் நடைபெற்றது.

இராயப்பேட்டை சைவ சமய பக்தஜன சபையினரும், சைவ சித்தாந்த மகா சமாஜத்தினரும் இராயபுரம் இறை பணிக் கழகத் தினரும், சென்னைத் திருவாளர்களான, ஜி. கலியாணம் பிள்ளை,

K. A. அருணாசல முதலியார், மேயர் கம்பெனி மாசிலாமணி முதலியார், சாரதி பிலிம் மானேஜர், இராமமூர்த்தி ஐயர், முதலியோர் விழாவில் கலந்துகொண்டார்கள்.

ஸ்ரீ மெய்கண்டார் குருபூஜைத் திருநாள்

1—11—59 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சமயப்பிரசார நிலையத்தின் சார்பில் திருவொற்றியூர் ஸ்ரீ தியாகேசப்பெருமான் திருக்கோயிலில் சந்தானுசாரியார்களுள் முதல்வராகிய ஸ்ரீ மெய்கண்ட தேவநாயனாரின் குருபூஜைத் திருநாள் கொண்டாடப்பெற்றது. அவ்வமயம் சைவப்பெரியார், திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை B. A., L. T., அவர்கள் விழாவினைத் தொடங்கிவைத்தார்கள், தருமையாதீனப் புலவர் சித்தாந்த சிகாமணி, காஞ்சிபுரம், திரு. க. வச்சிரவேல் முதலியார் B. A., L. T., அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்தார்கள். திரு. ச. சிவகுமாரன் M. A., அவர்கள் "மெய்கண்டார் வரலாறு" பற்றியும், புலவர், திரு. N. R. முருகவேள் M. A., M. O. L., அவர்கள் "சிவஞானபோதம்" பற்றியும் விரிவுரை நிகழ்த்தினார்கள். நிலையத் திருமுறை வகுப்பு ஆசிரியர், திரு. P. சுவாமிநாதன் அவர்களும், மாணவ மாணவியர்களும் திருமுறைப் பாராயணம் நிகழ்த்தினார்கள்.

கந்தசஷ்டி விழா விரிவுரை

சென்னை தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில் 1—11—59 முதல் 7—11—59 முடிய உள்ள நாட்களில் கந்தசஷ்டி விழாவைக் குறித்து நாள்தோறும் 6-30 மணிக்கு உடையாளூர் பாலவால்மீகி ஸ்ரீ இராமமூர்த்தி சர்மா அவர்கள் கந்தபுராண விரிவுரை நிகழ்த்தினார்கள். அறிஞர்கள் பலர் தலைமை வகித்தும், சொற்பொழிவாற்றியும் விழாவினைச் சிறப்பித்தார்கள். சமயப் பிரசார நிலைய மாணவ மாணவியர்களால் தேவார திருப்புகழ்ப் பாராயணம் செய்யப் பெற்றது. நாடகம், நடனம் முதலியனவும் நடந்தன. வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வரவேற்புரை நன்றியுரை முதலியன கூறி விழாவினைச் சிறப்புற உடனிருந்து நிகழ்த்தினார்கள்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்திற்கு வரவேற்பு

திருச்செந்தூர் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி

தேவஸ்தான தர்மகர்த்தர்கள் சமர்ப்பித்த

வரவேற்பு மலர்

4—11—59

தருமை ஆதீனம் தழைத்தினிதோங்க அருமைசால் குரு மூர்த்தியாம் அண்ணலே வருக !

தாங்கள் திருக்கயிலாய தரிசனம் செய்துவிட்டு இவண் எழுந்தருளிய தங்கள் முகக்கதிர் கண்டு கதிரவனைக்கண்ட கமலம் மலர்வதுபோன்று அகம் மகிழ்வடைந்தோம்.

சைவப்பணியே தவமெனக் கொண்டோய் !

" என் கடன் பணி செய்து கிடப்பதே " என்னும் ஆன்றோர் அருள்மொழிக்கிணங்க, சைவநெறி தழைத்தோங்க, தேவாரம் திருவாசகம், திருப்புகழ் முதலிய சைவத் திருமுறைகளைச் சிறு சிறு பாகமாகப் பிரித்தும் தொகுத்தும் பதிப்பித்து வெளியீடாக வும், தனித்தனியாகவும் வழங்கி வருதல் மாநிலத்தார்க்குப் பயன்தரத்தக்கதேயாம்.

திருத்தளி சிறப்புறச் செய்யுந் தேசிக !

தங்கள் ஆதீனத்திற்குட்பட்ட தேவாலயங்களைச் செம்மை யுறச்செய்ய வேண்டுமென்ற குறிக்கோளுடன் திருப்பணிகள், செப்பனிட்டும், புதுக்கியும், குடமுழுக்கு விழாவினைக்குறைவி லாது நடத்தியும் தோன்றுகின்ற ஆலயங்கள் விண்ணிற் காணும் உடுக்களென விளங்குகின்றன. மேலும் இதுபோன்ற செயல்கள் ஆற்றச் சித்தங் கொண்டருளியிருப்பது தங்கள் நோக்கால் திகழ்கின்றது.

அருணைக்கழகம் அமைத்துறும் அண்ணலே !

திக்கெலாம் புகழுறு திருநெல்வேலியில் சைவமும் தமிழும் தழைத்தினிதோங்க ஞாயிற்றுக்கிழமை தோறும், பல அறிஞர் களைக்கொண்டு சமய, தமிழ் சொற்பொழிவுகள் நிகழ்த்தவும் பாடங்கற்பிக்கவும், ஆண்டுதோறும் தைத்திங்கள் முதல்நாள் முதல் ஒருவாரம், தமிழ்த்திருநாளெனும் பெயரால் தமிழ் விழா நடத்தி முத்தமிழ் வளர்க்கவும், கலைக்கழகமொன்று வாக்கிற் கருணகிரி என்று புகழப்பெறும் அருணகிரிநாதர் பெயரால் அமைத்துச் சைவத்தமிழ்ப்பணி புரியும் அறிவுசால் அண்ணலே நும் தமிழ் சைவ வளர்ச்சிக்குச் செய்யும் தொண்டினைப் போற்று கின்றோம்.

கயிலை கண்டு காணுறு சுந்தர !

சுந்தரன் கண்ட கயிலையே, சுந்தரக்கயிலையெனக் கொண்டு அம்மையும் அப்பருங்கண்டு களித்த கயிலையே தெய்வக்கயிலை, சீருறு கயிலை எனக்கண்டு வெற்றியடைந்து திரும்பிய வீரர் போன்று, அவண் அடையும் இன்னல்களைப் பொருட்படுத்தாமல் ஆங்காங்கு வழிபடும் அடியார்க்கு அருள் ஆசி வழங்கியும், சிவலிங்கப் பிரதிஷ்டை செய்தும்திரும்பிய திறத்தினைவியவாதார் யாரே !

செந்திற்பதி வருந்தேசிக மூர்த்தியே !

ஆண்டுதோறும் நிகழ்ந்துவரும் கந்தர்சஷ்டி விழாவில் இவண் எழுந்தருளிச் செந்திலாண்டவனுக்கு அபிடேக, அலங்கார. ஆராதனைகள் முறையே குறைவறச் செய்து அடியார் குழாமுடன் இன்னிசைத் திருமுறை யோதக்கேட்டு, மகிழ்ந்து, வணங்கி, அருள்பெற்று அருள்தனை யாவருக்கும் வழங்கும் காட்சி கண்டோர் கருத்தைக் கவரவல்லதே.

எடுத்துக் காட்டாய் இலகுறும் மணியே !

தாங்கள் எம்மவரன்ன, அறநிலையப் பாதுகாப்புக் குழுவின ருக்கும் அறம்பல ஆற்றவேண்டுமென்ற ஆர்வமுள்ளார்க்கும் கலங்கரை விளக்கமாய்த் திகழ்கின்றீர்கள். தாங்கள் பல்லாண்டு,

பல்லாண்டு வாழ்ந்து பணிபல புரிந்து அறம் ஆற்றி, மக்கள் உய்யும் வண்ணம் ஞானச்செங்கோலோச்சி எழிலுற்றிலங்கு வண்ணம் செந்திலாண்டவன் திருவடியை மனமொழி மெய்களால் வாழ்த்தி வணங்குகின்றோம்.

திருச்செந்தூர் சைவ வேளாளர் ஐக்கிய சங்கத்தார்

சமர்ப்பித்த

வரவேற்பு மலர்

4—11—59

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருக்கேதாரம், அமரநாத், பசுபதிநாத் யாத்திரைகளை முடித்து விட்டு, பின்னர் திருக்கயிலாயம் தரிசனம் செய்யத் திருவுளங்கொண்டது, தங்களது திட சித்தத்தையும், சிவபெருமானிடம் உள்ள இடையரு அன்பையும் வெளிப்படுத்துகிறது, ஏனைய யாத்திரைகளிலுள்ள இன்னல்களையும், கஷ்டங்களையும் நேரிலே அனுபவித்தும், திருக்கயிலாய யாத்திரையை மேற்கொண்டது தங்களது தளர்வடையா மனோதைரியத்தையும் ஆழ்ந்த சிவபக்தியையும் புலப்படுத்துகிறது. சந்நிதானம் அவர்கள் திருக்கயிலாயத்தில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்தது முன்காலத்தில் வீரத்தமிழ் மன்னர்கள் இமயத்தில் வெற்றிக்கொடியை நாட்டிய நிகழ்ச்சிகளை நினைவூட்டுகின்றது.

சைவ சமயத்திற்கும் தமிழ்மொழிக்கும் மகா சந்நிதானம் அவர்கள் செய்துவரும் பணிகள்சைவமக்களைப்பக்திமார்க்கத்தில் செலுத்தி சமய ஞானமுள்ளவர்களாக்கி வருகின்றன. சைவ உலகம் என்றென்றும் தங்களைப் போற்றும்.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களைத் தரிசிப்பது, திருக்கயிலாயநாதனையே தரிசிப்பதாகக் கருதுகிறோம். தங்களது ஆசிமொழி எங்களை மென்மேலும் சிவப்பணியில் ஊக்குவிப்பதாக.

தங்களுக்கு அரோக திடகாத்திரமும், நீடிய ஆயுளும் அருளுமாறு திருச்செந்திலாண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எதிர்காலம்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ. கே. முத்துஜோதிடர் அவர்கள்,
திருவிடைமருதூர்.

(விகாரிஞூ கார்த்திகைமீ 1உ முதல் 29உ முடிய)

(17—11—59 முதல் 15—12—59 முடிய)

1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை $\frac{1}{4}$

அசுவதி நான்கு பாதங்களும் சுபமிராது. அதிக விரயமும், நஷ்டமும் காட்டும். பரணி முதல் பாதம் சுகம் தரும். குடும்பம் ஓங்கும். பரணி 2, 3, 4 பாதங்கள் மிசிரபலனைத் தரும். கார்த்திகை முதல் பாதம் வீண் அலைச்சல், அபவாதம் நஷ்டம், கவலைகள் இவைகள் ஏற்படும். புதன், சனி சுபமாகும்.

2. விருஷபம். கார்த்திகை $\frac{3}{4}$, ரோஹிணி - மிருகசீரிஷம் $\frac{1}{2}$

விருஷபம் 9 பாதங்களும் சுபத்தைத் தந்து எதிலும் பந்தத்தை உண்டுபண்ணும். கஷ்ட நஷ்டங்கள், வீண் அபவாதங்கள், அதிக விரயங்கள் முதலாய சிரம பலனாகவே நடக்கும். திங்கள், புதன் சுபமாகும்.

3. மிதுனம். மிருகசீரிஷம் $\frac{1}{2}$, திருவாதிரை - புனர்பூசம் $\frac{3}{4}$

மிருகசீரிஷம் 3, 4 பாதங்களும், திருவாதிரை நான்கு பாதங்களும் மிசிரமாய் நடக்கும். சிற்சில கஷ்டங்கள் ஏற்பட்டதும் நிவர்த்தியாகும். மனம் சாந்தியடையும். தொழில் ஓங்கும். பெரியோர் நேசம் ஏற்படும். புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள் சதா அல்லல்களால் பாதிக்கப்பட்டு வீண் நஷ்டங்களையும், கலவரங்களையும் உண்டாக்கி, தெய்வபலத்தால் மாறி ஜயம் உண்டுபண்ணும். முடிவிற்கு எல்லாம் ஜயகரமாகவும், லாபகரமாகவும் நடக்கச்செய்யும். சத்துருக்கள் சரண் அடைவார்கள். மாதக் கடைசிக்குள் எல்லாம் நன்மையாகவே முடியும். புதன், வியாழன் சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் $\frac{1}{4}$, பூசம் - ஆயில்யம்

புனர்பூசம் நான்காம் பாதம் வித்தியா விருத்தியாகும். பிரபு ஜனச் சேர்க்கைகள் ஏற்படச்செய்யும். கட்டடங்கள் கிரய விக்கிரயங்கள் ஏற்படும். பூசம் நான்கு பாதங்களும், ஆயில்யம் நான்கு பாதங்களும் விசேஷ கௌரவ பட்டங்களைத் தந்து என்றும் கண்டிராத சுகபோகங்களை உண்டுபண்ணும். நினைத்த தெல்லாம் சித்திக்கும். தெய்வபலம் ஓங்கும். புதன், வியாழன் சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

மகம் நான்கு பாதங்களும் உத்தியோக லாபத்தையும், மேல்பதவிகளையும் தரும். பூரம் நான்கு பாதங்களும் விவசாயத் தால் லாபத்தையும், குடும்ப சுகத்தையும் தரும். உத்திரம் முதல் பாதம் தூரப் பிரயாணத்தையும், காரிய சித்திகளையும் உண்டுபண்ணும். சனி, செவ்வாய் சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

உத்திரம் 2, 3, 4 பாதங்கள் ஜயத்தை உண்டுபண்ணும். மேலோர் பெரியோர் அன்பு கிட்டும். அசாத்தியமெல்லாம் சுலப்சாத்தியமாகும். கீர்த்தி ஓங்கும். ஹஸ்தம் நான்கு பாதங் களும் சுபத்தைத் தரும். தெய்வபலம் முன்நிற்கும். எதிர்பாராத லாபங்களும், நினைத்தபடி எல்லாம் நடத்தலும், குடும்ப சுகமும், புத்திராதிகளால் கீர்த்தியும், பந்துமித்ராளுடைய வரத்தும், கீர்த்தி பத்திரங்கள் கிடைத்தலும், எங்கும் பிரசித்த மும் ஏற்படச் செய்யும். சித்திரை 1, 2 பாதங்கள் மிசிரமாய் நடக்கும். வெள்ளி, சனி சுபமாகும்.

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

சித்திரை 3, 4 பாதங்கள் அலைச்சலையும், நஷ்டத்தையும் உண்டுபண்ணும். வீண் மனஸ்தாபம் ஏற்படச் செய்யும். சுவாதி 4 பாதங்களும் ஆரோக்கியத்தைத் தரும். எதிர்பாராத தனப்ராப்திகளையும் தரும். விசேஷ கீர்த்தியும், லாபமும் உண்டாக்கும். தெய்வபலம் பிரகாசிக்கும். விசாகம் 1, 2, 3 பாதங்கள் அடிக்கடி சஞ்சாரபலன்களையும், தன லாபங்களையும்

தரும். பெரியோர்கள் அன்பு கிட்டும். புதன், வியாழன் சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$, அனுஷம் - கேட்டை.

விசாகம் 4 ம் பாதமும், அனுஷம் 4 பாதங்களும் வன சஞ்சாரத்துக்கு ஒப்பாக நடக்கும். வியாதியாலும், கடனாலும் தொல்லை ஏற்படும். சுபமிராது. கேட்டை 4 பாதங்களும் அந்நிய ஸ்தலவாசத்தில் சுகசௌபாக்கியத்தைத் தரும். லாபங்களும், கிரகசுகமும், ஆடையாபரணச் சேர்க்கையும் உண்டுபண்ணும் ஆரோக்கியமாயும் இருக்கும். திங்கள், புதன் சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

தனுர் ராசி 9 பாதங்களும் சுக துக்கங்கள் சமமாய் நடக்கச் செய்யும். விசேஷ லாபமும் ஏற்பட்டு விசேஷ விரயமும் ஏற்படும். இல்லறம் ஓங்கும். பெரியோர் அன்பு கிட்டும். புதன், வியாழன் சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம் - அவிட்டம். $\frac{1}{2}$

உத்திராடம் 2, 3, 4 பாதங்கள் சுபாதிகளைத் தரும். கிரக சுகம் ஓங்கச் செய்யும். கார்யசித்தி ஏற்படும். திருவோணம் 4 பாதங்களும், அவிட்டம் 1, 2 பாதங்களும் உத்தியோகத்தில் மேல்பதவிகளைத் தரும். நூதன வஸ்திராபரண சேர்க்கை களையும், நூதன கிரக லாபங்களையும் தரும். மனம் சந்தோஷ மடையும். எங்கும் பிரசித்தியை உண்டுபண்ணும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$, சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$

அவிட்டம் 3, 4 பாதங்கள் விசித்திர கிரகவாசத்தையும், இல்லற சுகத்தையும், ஆரோக்கியத்தையும் தரும். சதயம் 4 பாதங்களும் சுபத்தைத் தராது மேல்பதவியிலிருந்து கீழ்தரத் தையும், நஷ்டங்களையும் உண்டுபண்ணும். பூரட்டாதி 1, 2, 3 பாதங்கள் குடும்ப சுகத்தையும், நூதன வஸ்திராபரணங்களை

யும் தந்து ஆரோக்கியத்தையும் உண்டுபண்ணும். புதன் வெள்ளி சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி - ரேவதி.

பூரட்டாதி 4 ம் பாதம் ரிணரோக சத்துருக்களை உண்டு பண்ணும். சுபமிராது. உத்திரட்டாதி 4 பாதங்களும், ரேவதி 4 பாதங்களும் விசேஷ தனலாபத்தைத் தந்து சிநேகிதர்களை விருத்திபண்ணும். தொழில் ஓங்கும். வினைப்பயன் முன்னின்று கோப தாபங்களை உண்டுபண்ணும். பெரியோர் தரிசனத்தாலும், தெய்வபலத்தாலும் மாறும். சுபமுண்டாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

குறிப்பு :- மேற்படி மாதமும் இயற்கைகள் சரியாக இராது. பயிர்களுக்கு நோய் உண்டாகும். விந்திய மலைக்கு வடக்குப் பிரதேசத்தில் அமைதி இராது. கலகங்களும் ஈதிபாதைகளும் அதிகமாகும். தர்மமும், தெய்வபலமும் இருந்தால் ஜயிக்கும். தென்தேசம் சுபிக்ஷசூசனையாக இருக்கும். உலகை தெய்வபலம்தான் நடத்துகிறது என்பதைப் பிரகாசப் படுத்தும் கடவுள் துணை.

நவமணிமாலை கீர்த்தனை

வித்துவான், திரு. ப. இராமநாதபிள்ளை, தமிழாசிரியர், மன்னார்குடி.

இராகம் – சாவேரி] [தாளம் – திரிபுடை

பல்லவி

காவேரி தீரந் தன்னில் — காவளர் தர்மபுரம்
நாவேறத் துதிசெய்யும் — நவசத்தி லக்ஷ்மிதுர்க்கை (காவேரி)

அநுபல்லவி

சாவேரி ராகம்பாட — சாமமறைமுழங்க
சேவேறு மீசர்க்கன்பர் — சேர்ந்து தொழுதிடுவார். (காவேரி)

சரணம்

மீனேறு நீர்நிலையும் — சேணேறு கற்பகமும்
தேனேறு மலர் ஓங்கு — வானேற மாமணம்
தானேறத் தேவர்கணம் — தான்தேருச்சிவஞானக்
கோனேரும் சுப்ரமண்ய — குரவனூர்மகிழ்ந்தேத்தும்.(காவேரி)

திருநெல்வேலி குருஞானசம்பந்தர் கழகத்தார்
திருமையருள்பெறு அருணகிரி இசைக்கழகத்தார் அளித்த

வரவேற்பு வாழ்த்து மலர்

9—11—59

கயிலைத் தபோநிதி !

ஸ்ரீ மெய்கண்டார் பரம ஞானமூர்த்தி; ஸ்ரீ குருஞானசம்பந்தர் பரம கருணைமூர்த்தி. மெய்கண்டாரின் அபாரமான ஞான சக்தியையும் குருஞானசம்பந்தரின் கருணை நிறைந்த விசால மான இருதயத்தையும் ஒரு திருமேனியிலே பொருந்தித் தாங்கள் திகழ்கின்றீர்கள். அதன் பயனுய், எல்லா இடங் களிலும் உள்ள ஏழைகள், அனுதைகள், நோயாளிகள், தாழ்த்தப் பட்டவர்கள் பொருட்டு உள்ளங்கரைந்து உருகி அனுதாபப் படுகிறீர்கள். வாதுபுரியும் பல்வேறு சமயங்களையும் சமரசப் படுத்தி, பக்தியும் ஞானமும் ஒருங்கே அமைந்த ஆச்சரியமான சமரச சித்தாந்த நிலையை எங்கும் ஏற்படுத்தி வருகிறீர்கள்.

ஒப்பற்ற ஞானமூர்த்தீ ! இக் காலத்திலே எடுத்ததற் கெல்லாம் கடவுள் பெயரைச் சொல்வதும், உலகறியப் பிரார்த்தனை செய்வதும், பக்தியைப் பகட்டுடன் காட்டுவதுமே மதம் என்று பலரும் கருதும்போது, தாங்கள் கடவுள் இருப்பது உண்மையாயின் அவ்வுண்மையை நாமே உணர்ந்து கடவுளை நேருக்குநேர் காண்பதற்கு ஒரு வழி இருக்கத்தான் வேண்டும், நமது சமய நூல்கள் காட்டும் அவ்வழியிலே என்ன ஆபத்துகள் நேரினும் அதில் சென்றேதீரவேண்டும் என்று துணிந்து செல்கின்றீர்கள். அத் துணிபு எங்களையும் வழிநடத்துவதாக. தாங்கள் வாழ்க, பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்து கின்றோம். 'எது எமைப் பணிகொளுமாறு அது கேட்போம்'

திருநெல்வேலி நகரசபை அளித்த

வரவேற்பு மலர்

10—11—59

கயிலைத் தபோநிதி !

தமிழ் நாட்டின் பழம் பெருமைகளைக் குறித்துப் பேசும் பலரும் கடவுள் அருள்பெற்ற முனிவர்கள். பண்டைய காலத்து

அற்புதங்கள் போலவும், தற்காலத்திலே அத்தகையோர் மீண்டும் அவதரிப்பது அரிது போலவும் சொல்கின்றனர். இது பொருந்தாது; ஏன் என்றால்,

யோகமும் தவமும் எங்கும்
ஊசலும் மறுகும் எங்கும்
போகமும் பொலிவும் எங்கும்
புண்ணிய முனிவர் எங்கும்

என்று சேக்கிழார் சிறப்பித்துப் பாடிய தமிழ் நாட்டிலே வீரரும், முனிவரும், பக்தரும் அவ்வப்போது அவ்வக்காலத் துக்கு ஏற்பத் தோன்றியே வந்திருக்கின்றனர். நாயன்மார்கள் என்ன, ஆழ்வாராதிகள் என்ன, சங்கரர், இராமாநுசர், மெய் கண்டார் என்ற மகான்கள் பரம்பரையிலே இன்னும் பல முனிபுங்கவர் தோன்றியும் தோன்றிக்கொண்டும் இருக்கின்றனர். அவர்களிலே தாங்கள் ஒருவர், தாங்கள் வாழ்க.

தங்கள் பரம்பரை கயிலாய பரம்பரை, அதிலே 25-ஆவது குருமகாசந்நிதானம் தாங்கள். இந்தப் பரம்பரையிலே தாங்கள் ஒருவர்தான் தங்கள் ஞானபீடமாகிய கயிலாயத்துக்கு எழுந் தருளிக் கயிலை மாமுனியாகத் திகழ்கின்றீர்கள். கடவுள் கடாட்சத்தால் தாங்கள் கண்ட அருட் காட்சியையும் தாங்கள் கேட்ட அருள் மொழியையும் தங்களுக்குள்ள முழுவல்லமை யோடு தமிழ் மக்களுக்கு அறிவுறுத்தி ஆன்மஞான விஷயங்களை அனுபவ சாத்தியம் ஆக்கி வருகிறீர்கள். தாங்கள் வாழ்க.

சமயத்துக்கும் முத்தமிழுக்கும் வடமொழிக்கும் தங்கள் ஆதீனம் வளர்ப்புப் பண்ணையாகத் திகழ்கிறது. தாங்கள் வேதசிவாகம பாடசாலை தேவார பாடசாலைகளும் வடமொழி தமிழ் மொழிக் கல்லூரிகளும் பெரும் பிரசித்து வாய்ந்தவை. சென்னை மாநகரிலும், திருநெல்வேலியிலும் தாங்கள் நிறுவி யுள்ள பிரசார நிலையங்கள் திறமையாகச் செயலாற்றி வருகின்றன. அரியதும் பெரியதும் ஆகிய நானூற்றுக்கு மேற் பட்ட சமய நூல்களைப் பெருஞ்சிலவிலே அச்சிட்டு, இலவச மாக வழங்கியிருக்கிறீர்கள். அனாதைச் சிறுவர்களுக்கு விடுதி அமைத்தும், ஹரிஜன மாணவர்க்கு அன்னம் பாலித்தும், ஏழை மாணவர்க்குப் பொருளும் புத்தகமும் தந்தும் உதவி வருகிறீர்கள். மாயூரத்திலே மிகப் பெரிய மருத்துவ மனை நிறுவியிருக்கிறீர்கள். இந்த சமுதாய சேவைகளைச் சமயத்

தொண்டாகவே தாங்கள் செய்து வருகிறீர்கள். தங்கள் பரி பாலனத்திலே அமைந்துள்ள தேவாலயங்களிலே தாங்கள் புரிந்துள்ள திருப்பணிகளும் கும்பாபிஷேகங்களும் அனைவ ராலும் புகழப்பட்டுள்ளன.

தாங்கள் வாழ்க பல்லாண்டு வாழ்க என்று மீண்டும் வாழ்த்துகிறோம்.

திருநெல்வேலி நகரப்பிரமுகர்கள் அளித்த

வரவேற்பு வாழ்த்து மலர்

10—11—59

கயிலைத் தபோநிதி!

சைவத்தின் மேற் சமயம் இல்லை என்ற நம் முன்னோர் கருத்து, நமது மதம் அகில உலக சமயமாக விளங்குவது என்பதுதான். இது ஒரு நாட்டின் எல்லைக்கு உட்பட்டதோ, ஏதோ ஒரு காலத்தில் யாரோ ஒருவரால் தோற்றுவிக்கப் பட்டதோ அல்ல; தோன்று தோட்டு அனாதியாய் வருவது. வாழ்க்கையின் மிக சிறுவிவரமும் சமயாசாரமாகக்கொண்டு மிளிர்வது. இறைவனுக்கும் நமக்கும் உள்ள தொடர்பை உணர்த்தி மனிதன் அவனை அடைதற்குக் கூடுமான எல்லா வழிகளையும் தன்னுள் அடக்கி நிற்பதுபோலவே விஞ்ஞான உண்மைகளையும் தத்துவ விசாரணைகளையும் முன்னுணர்ந்து தன்னுள் அடக்கி உள்ளது நமது சமயம் ஒன்றுதான் என்பதைத் தாங்கள் தங்கள் பிரசார சாதனங்களின் மூலம் உலகுக்கு வலியுறுத்தி வருகிறீர்கள்.

இறைவன் எல்லா உயிர்களிலும் எல்லாப் பொருள்களிலும் குடிகொண்டுள்ளான்; அவனாலேயே நாம் இயங்கி உயிர் வாழ் கின்றோம் என்னும் உண்மையை எல்லாச் சமயங்களும் ஒப்புக் கொள்கின்றன. ஆயினும், இந்து மதம் அதிலும் சைவம் ஒன்றே அவ்வுண்மையை நமது அன்றாட வாழ்க்கையின் நடை முறையில் வற்புறுத்துகின்றது என்பதைத் தாங்கள் தங்கள் பத்திரிகை வாயிலாக அறிவுறுத்துகிறீர்கள்.

கடவுளின் திருவிளையாடல்தான் இவ்வுலகம்: அந்தத் திருவிளையாடலின் மிகநுட்பமான நியதிகளையும் மிக உன்னத மார்க்க விதிகளையும் விளக்கி, நாம் எவ்விதம் நமக்குரிய பாகத்தை

நன்கு நடத்தலூம் என்று தாங்கள் அடியார்க்கு அருள் உபதேசம் செய்து வருகின்றீர்கள். இச்செயல்களால் தாங்கள் சமயத் தலைவர்களிலே தனிப்பெருமையும் தனிச் சிறப்பும் கொண்டு விளங்குகிறீர்கள். தாங்கள் வாழ்க.

ஓங்கியும் தாழ்ந்தும் உள்ள குன்றுகளிடையே ஒரு குன்று மட்டும் தனித்துத் தன் வலிமை ஒன்றினாலேயே தலை நிமிர்ந்து நிற்கிறது. அதன் உச்சியிலே மரம் ஒன்று தனித்து வானுற வளர்ந்திருக்கிறது. பளிங்கு போலத் தெளிந்த அருவி அதனி னின்றும் பொங்கிப் பாய்ந்து அருகில் உள்ள பள்ளத்தாக்குக்கு வளமும் வனப்பும் செய்கிறது, குன்றுகளின் இடையே உள்ள இத் தனிக்குன்றின் காட்சியைப் போலவே, தாங்கள் தங்கள் சேவைகளால் எங்கள் மனத்தின் ஆழத்தில் பதிந்திருக்கிறீர்கள். தங்கள் சேவைகள் பலதிறத்தன, தாங்கள் செய்துள்ள திருப்பணிகள் பல, கும்பாபிஷேகங்கள் பலப்பல, வெளி யிட்டுள்ள நூல்கள் மிகப் பல, தெளிவு உண்மை நேர்மைகளின் சின்னமாக அவை திகழ்கின்றன. தாங்கள் வாழ்க, பல்லாண்டு பலகோடி நூறுயிரம் என்று மீண்டும் வாழ்த்துகிறோம். 'ஆளாய் இனி அல்லேன் எனலாமே'.

திருநெல்வேலி ம. தி. தா. இந்துக் கல்லூரி
பிரின்சிபால், போராசிரியர்கள், மாணவர்கள் அளித்த

வாழ்த்து மலர்

10—11—59

கயிலைத் தபோநிதி!

தருமையாதீனத்திலே இன்று எழுந்தருளி அருளாட்சி நடத்தும் தாங்கள் ஒரு தனிச்சிறப்புடன் விளங்கிவருகின்றீர்கள். பல முகமான தங்கள் பணியிலே தனிப் பெருமையும் தனிப் பண்பும் கொண்டு விளங்குகின்றீர்கள். தங்கள் திருப்பணி இன்னது என்பதைத் தெளிவாகவும் திட்டமாகவும் தெரிந்து, அதற்குரிய சாதனங்களைத் தேர்ந்தெடுத்து வினைத்திறனும் ஆற்றலும் வாய்க்கப்பெற்று, தமிழ் மக்கள், மறந்துவிட்ட பழைய ஞானத்தையும் சக்தியையும் மீண்டும் பெற்று, இப் புவியிலேயே பூரண அமரவாழ்வை எய்தும் பொருட்டு, இறைபணியை இடையறாது நிறைவேற்றி வருகிறீர்கள். தாங்கள் வாழ்க, பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்துகிறோம்.

நவமணிகள்

[திருவாவடுதுறையாதீனம் 21வது ஸ்ரீலஸ்ரீ குருமகா்சந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திர விழா மலா்; ஆசிரியா் - திரு. T. S. வைத்தியநாதன் அவா்கள்; பக்கங்கள் 304; விலை குறிக்கப்பெறவில்லை.]

" சென்றிடுவீர் எட்டுத் திக்கும் — கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர் "

என்றான் மாக்கவிஞன் பாரதி. புதிய புதிய துறைகளிற் தமிழிற் பல நூல்கள் பெருகவேண்டும். அவ்வத்துறையிற் புலமையும் தேர்ச்சியும் வாய்ந்தவர்களைக்கொண்டு அவ்வந்நூல்களை ஆக்கி வெளியிட வேண்டும். இது தலையாய தொண்டு. உலகம் நம்மை வியந்து நோக்கவேண்டுமாயின் நம் மொழிநூல்கள் புதிய துறைகளில் - புதிய முறைகளில் பொலியவேண்டும். திருவாவடுதுறை யாதீனத்தைச்சேர்ந்த அன்பர், திரு, T S. வைத்தியநாதன் அவர்கள் சீரிய மணியாராய்ச்சியாளர்; இளமைதொட்டே மணிகளைத் தேர்ந்து வாய்த்த நேர்முக அறிவும் உடையவர்கள். அவர்களது அரிய முயற்சியே இத் திருநூல். பல்கலைக் கழகங்களில் தமிழ் ஆட்சி மொழியாகி வரும் இந்நாளில், பௌதிகத்துறையிற் பட்டப் படிப்பு முற்படுவோர்க்கு இத்துறையிற் சீரிய தமிழ்த்துணையாக இந்நூல் விளங்கும். இதன் பொருளமைதியும் சொன்னயமும் தொடக்கமுதல் முடிவுவரை மிக அழகாக-வெண்பளிங்கிற் செந்நூல் கோத்தாற்போன்று விளங்குகின்றன. பதினாறு தலைப்புக்களில் நூல் இயங்குகிறது. சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திருவாளர். A. L. முதலியாரவர்கள் அளித்துள்ள மதிப்புரையில் " The book is a useful publication and I hope it will appeal to a large section of the public, interested in the study of precious stones " என்று நம்பிக்கை தெரிவித்து வாழ்த்தியிருப்பதும் குறிப்பிடற்குரியது.

வைத்யம், இலக்கியம், சோதிடம், சாத்திரம், பலதுறைகளில் வெளிவந்துள்ள 61 தமிழ் நூல்களையும், ஆங்கிலத்துறையில் வெளிவந்துள்ள 31 நூல்களையும் வெளியீடுகளையும் தம் ஆராய்ச்சிக்குத் துணைக்கொண்டு இவ்வரிய நூலை ஆசிரியர் எழுதியுள்ளார், நவமணிகளின் பலவண்ணப் படங்கள் தேவையான இடங்களில் அழகு செய்கின்றன. தமிழில் இதுவரை வெளிவாராத ஓர் அழகிய - இனிய - இந்நாளில் சாலவுந் தேவையான முயற்சியின் முழுவடிவாக இந்நூல் விளங்குகிறது எனலாம்.

நூலின் நடை உயிர்ப்புடைய - தெளிந்த - அழகுத் தமிழ் உரை நடை. நூலின் கட்டமைப்பும், கட்டழகும் நமசிவாயமூர்த்தி அச்சகத்தாரின் கைவன்மைக்குச் சான்றுகள்,

ஆசிரியர் திருவாளர். T. S. வைத்யநாதன் அவர்களுக்கு அறிவுலகின் சார்பில் நன்றி. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் இந்த நவமணிகள் திருக்கை வழக்கத்துக்கு ஈடு இணை இல்லை. தமிழ் மக்கள் பயின்று இன்புற்று அறிவுவளம் பெருக வேண்டுகிறோம்.

அறம்வளர்த்த மங்கையர்

[ஆசிரியர் - செந்தமிழ்ச்செல்வி, புலவர், திருமதி. சி. ந. குழந்தையம்மாள் அவர்கள் M. L. A., கோவை; பக்கங்கள் 100; விலை 90 காசுகள்; கிடைக்குமிடம்:- The Book centre, Rajaveedhi, Coimbatore.]

இதன்கண் ஆசிரியை கூற எடுத்துக்கொண்டுள்ள வரலாறுகள் தமிழகத்தின் மூன்று கற்பரசிகளைப் பற்றியவை. 'சேரன் தம்பி இசைத்த சிலம்பின்' உள்ளுறையாய் ஒளிரும் பத்தினித்தெய்வமும், கொங்கச் செல்வியும் குடமலையாட்டியும் தென்றமிழ்ப்பாவை செய்தவக் கொழுந்துமாகிய கண்ணகி. சாத்தன் காப்பியத்தின் தலைவியாம் மணிமேகலை; அவட்குப் பிச்சையிட்ட ஆதிரை. எளிய நடையில் கற்கும் மாணவர் கருத்தில் தோயும்படி ஆசிரியை இந்நூலினை எழுதியுள்ளார். தருமையாதீனம் கயிலை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தால் 'செந்தமிழ்ச்செல்வி' என்று பட்டம் பெற்றதற்கேற்பச் செந்தமிழை ஒரு செல்வமாகக் கொண்ட இந் நூலாசிரியர் இரண்டு காப்பியங்களை இவ்வாறு அழகு நடையில் தந்திருப்பது மகிழ்விற்குரியது. பாத்திரங்களின் பண்புகளைக் குறித்து (character sketch) ஆராய்ந்துள்ளார். மனையறம், பசிப்பிணி நீக்கும் பேரறம், கற்பறம் - கொண்ட மங்கையர் பற்றிய இந்நூல் மாணவரேயன்றித் தமிழ்ப் பெருமக்கள் அனைவரும் பயில வேண்டிய ஒனருகும்.

வரப்பெற்றோம்

1. **எல்லோருக்கும் உணவு** - பக்கங்கள் 40; சென்னை அரசாங்கச் செய்தித்துறை வெளியீடு - விலை குறிக்கப்பெறவில்லை.

2. **வனவளம்** - பக்கங்கள் 31; விலை 12 காசு; இதுவும் சென்னை அரசாங்கச் செய்தித்துறை வெளியீடே.

3. **ஆடுராட்டே** - பக்கங்கள் 22; இதுவும் மேற்குறித்த வெளியீடே; விலை குறிக்கப்பெறவில்லை. இம் மூன்று நூல்களும் சென்னை அரசாங்கத்தின் உணவு, காடு, கதர்த்துறைகளில் வளர்ச்சி, நடைமுறை முதலியவற்றை விவரிக்கின்றன. தக்க புள்ளி விவரங்கள் தரப்பெற்றுள்ளன. அரசாங்கப் பணிகளையறிய இவை நன்கு உதவும்.

— சோ. சிங்காரவேலனார்.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram. (Mayuram) 10—11—59.